இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 23 ஆகஸ்ட் 2024 இதழ்:- 12

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Desjardins
Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## பொதுவேட்பாளர் அரியநேந்திரனுக்கே ஆதரவு! அதி மூத்த விடுதலைப்புலிப் போராளி பசீர் காக்கா



இறுதி யுத்தம் முடிந்து 15 வருடங்களாகி விட்டது. பேச்சு வார்த்தை, பேசுதல் என்பவற்றை தொடர்ந்து கேட்டு காது புளித்துப் போய் விட்டது. தமிழரின் ஆறாம் அறிவைக் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் புதுப்புது விளக்கங்களைக் கேட்டாயிற்று. எனவே நாம் இனி அடுத்த கட்டத்தை ஜனநாயக வழியில் மேற்கொள்வோமென விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதி மூத்த போராளி காக்காண்ணை என்று அறியப்பட்ட முத்துக்குமார் மனோகர் அழைப்பு விடுத்துள்ளார். (7ம் பக்கம் பார்க்க)

**ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca**

## இனப்படுகொலை “நினைவுச் சின்னம்” விவகாரம் ஶ்ரீலங்கா அரசின் கோரிக்கையை நிராகரித்த பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுனும் அதிகாரிகளும்



தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பை கனடாவின் பிரம்ப்டன் மாநகர முதல்வரும் அதிகாரிகளும் புறக்கணித்துள்ளனர். முன்னதாக, இந்த நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு இலங்கையின் எதிர்ப்பை முன் வைத்து இலங்கைத் தூதரக பொறுப்பதிகாரி துஷார ரொட்ரிகோ, பிரம்ப்டன் மாநகர முதல்வருக்கு கடிதம் எழுதியிருந்தார். அத்துடன், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் கனேடிய உயர்ஸ்தானிகர் (7ம் பக்கம் பார்க்க)

## தமிழ் பொது வேட்பாளர்:- காசு கொடுத்து குத்து மாடு வாங்கிய கதை!

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் திரு விழாவுக்கு கொடியேறியிருக்கிறது. செப்டம்பர் 21ம் திகதி தேரோட்டம். மறுநாள் தீர்த்த உற்சவம். திரு வேட்டை. இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் பற்றி அதிகம் பேசி கூடிக் கலைந்தவர்கள் தமிழ்த்தரப்பினர் தான். ஆனாலும் அவர்களால் ஒரு தமிழ்பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி தோல்வியில் முடிவடைந்திருக்கிறது. (அழகு குணசீலன் எழுதுகிறார். பக்கம் 9 பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!



என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்! தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



21 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N. & Conlin Rd**

Oshawa $275,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


**Danforth Ave & Victoria park**

East York $410,000
1 Beds • 1 Bath • 4 Rooms
Fully Renovated unit


**Neilson/Tapscott**

Malvern $460,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Adelaide St & Simcoe St**

Toronto $680,000
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Sheppard & Neilson**

Malvern $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!


**HWY 48 & High Street**

Georgina $774,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Brand New Never Lived Home

**McLevin Ave & Morningside**

Malvern $799,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement


**Mavis Rd / Eglinton Ave**


Mississauga $859,000
3 Beds • 3 Baths • 8 Rooms
Finished Basement


**Garner Rd E & Raymond Rd**

Hamilton $899,999
3 Beds • 5 Baths • 10 Rooms
Hardwood flooring throughout


**Church St N & Rossland Rd W**

Ajax $950,000
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

**Townline Rd & Shankel Rd**

Oshawa $1,099,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Finished Basementt


**Bristol Rd / Terry Fox Way**

Mississauga $1,119,999
3 Beds • 4 Baths • 9+1 Rooms
Easy commutes to the 401,403

**Midland Ave/ Eglinton Ave**

Scarborough $1,150,000
3 Beds • 2 Baths • 6+1 Rooms
Hardwood flooring throughout

**Hwy 48/Castlemore**
FOR LEASE

Markham $3,950
4 Beds • 3 Baths • 6 Rooms
1 Min to Mount Joy Go Train Station

**Staines/Finch**
FOR LEASE

Scarborough $3,700
4 Beds • 3 Baths • 7 Rooms
1 Min away to public school

**Hwy 7/Warden**
FOR LEASE

Markham $2,400
1+1 Bed • 2 Baths • 4+1 Rooms
Open concept layout

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கையில் யுத்தத்தின் பின்னராக மோதலைத் தூண்டும் முக்கிய காரணியாக காணிப் பிரச்சனை உள்ளது என மாற்றுக் கொள்கைக்கான நிலையம் தெரிவிப்பு

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னரான இலங்கையில் மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் மிக முக்கிய காரணியாகக் காணிப் பிரச்சினை காணப்படுவதாகவும், இதற்கு உடனடியாகத் தீர்வு காணத்தவறும் பட்சத்தில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் தீவிரமடைவதுடன், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் பாரிய பின்னடைவு ஏற்படும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் நில அபகரிப்புக்கள் மற்றும் அவை அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் பற்றி விரிவான விளக்கத்தையும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய பரிந்துரைகளையும் உள்ளடக்கி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் 'இலங்கையில் காணிப்பிரச்சினையின் குறுக்கு வெட்டு (ஒன்றுக்கொன்று தொடர்புடைய) போக்கு' எனும் தலைப்பில் 95 பக்க அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 15 வருடங்களின் பின்னரும் இனங்களுக்கு இடையிலான பிளவுகள் தொடர்வதுடன், யுத்தத்துக்கான அடிப்படைக்காரணிகள் இன்னமும் களையப்படவில்லை. அதன் ஓரங்கமாக பல தசாப்தகால காணிப் பிரச்சினை யுத்தத்தின் பின்னரும் தொடரும் அதேவேளை, இவ்விடயத்தில் பல்வேறு வழிமுறைகளில் நிகழும் அரச தலையீடுகள் நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவை ஏற்படுத்தக் கூடியவாறான பிளவுகளைத் தோற்றுவித்துள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வட, கிழக்கு மாகாணங்களில் அதிகாரங்களில் சமத்துவமற்ற நிலையைத் தோற்றுவிப்பதற்கு காணிகள் பயன் படுத்தப்பட்டு வந்திருப்பதுடன், தற்போது இப்பகுதிகளில் மேலோங்கி வரும் 'ஊடுருவல் போக்கு' அப்பகுதி மக்களிடையே அச்சத்தை விதைத்திருக்கிறது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பதிவாகி, தற்போதும் தொடர்ந்து வரும் காணிப்பிரச்சினைகள் குறித்து தனித்தனியாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணிப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், அதன் பின்னணியில் பரந்துபட்ட அளவிலான சட்ட மற்றும் கொள்கைசார் கரிசனைகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,

ஆட்சியியல் நிர்வாக மறுசீரமைப்புக்கள் மேற் கொள்ளல், மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் காரணிகளைக் களைதல், அவசியமான சட்ட மறுசீரமைப்புக்களை மேற் கொள்ளல், காணி அபகரிப்புக்களால் எதிர் மறையான பாதிப்புக்களுக்கு உள்ளானோருக்கு உரிய வாறான இழப்பீட்டை வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது.

# 6. மாத காலத்திற்கு இலங்கை செல்லும் கனடியர்களுக்கு இலவச விசா

35 நாடுகளின் குடிமக்களுக்கு இலவச விசா வசதியின் கீழ் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகள் இதில் சேர்ந்துள்ளன.


அக்டோபர் 1, 2024 முதல் 06 மாத காலத்திற்கு இந்த வாய்ப்பு கிடைக்கும். நாடுகளின் விபரங்கள் கீழே உள்ளன

ஐக்கிய இராச்சியம், ஜெர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், அவுஸ்திரேலியா, டென்மார்க், போலந்து, கசகஸ்தான், சவுதி அரேபியா,. ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நேபாளம், சீனா, இந்தியா, இந்தோனேஷியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேஷியா, ஜப்பான், பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, செக் குடியரசு, இத்தாலி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, இஸ்ரேல், பெலாரஸ், ஈரான், சுவீடன், தென் கொரியா, கத்தார், ஓமன், பஹ்ரைன், நியூசிலாந்து ஆகிய நாடுகளாகும். 6 மாத காலம் மட்டுமே இது நடைமுறையில் இருக்கும்.

# வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்கு கேட்க நாமல் வரக் கூடாது! ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர் காட்டமாகத் தெரிவிப்பு!

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை அதிகாரம் வழங்காத எந்தவொரு வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறான நிலைப்பாட்டை நிராகரிப்பவர்கள் வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்கு கேட்க வர வேண்டியதில்லை என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன்

யாழ் ஊடக அமையத்தில் 20 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தென்னிலங்கையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் வடக்கு கிழக்கு ஒன்றிணையக் கூடாதென்றும் அதிகாரப் பகிர்வுக்கு என்றுமே இடமில்லை என்றும் பொலிஸ் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.



இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் தமிழருடைய அரசியலுரிமை பிரச்சினை அவ்வப்போது பேசப்பட்டு வந்தாலும் காலப்போக்கில் பல்வேறு ஒப்பந்தங்கள் பல்வேறு இணக்கப்பாடுகள் பல்வேறு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட பின்னரும் அதில் முன்னேற்றங்கள் காணப்படாமையால் தரப்படுத்தலூடாக தமிழ் மக்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டங்கள் தலைதூக்கி பல உயிர்த் தியாகங்கள் சொத்தழிவுகள் அங்கவீனங்கள் சொல்லெணா துயரங்களுக்கு பின்னர் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக மாகாண அரசு முறைமை கொண்டுவரப்பட்டது. 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக கிடைத்த அந்த குறைந்த அதிகாரம் கொண்ட மாகாண முறைமைக்கு அதிகாரங்களோ அதிகாரப் பகிர்வோ வழங்க மறுக்கும் ஜனாதிபதி வேட்பாளர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பிரசார நடவடிக்கைகளுக்கு வரத் தேவையில்லை. அவ்வாறான வேட்பாளர்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

நாம் தமிழ் கலாச்சாராத்தை பாதுகாக்கும் தரப்பினர். மொழியை எம்மால் பாதுகாக்க முடியும். எனினும், காவல் துறை மற்றும் காணி அதிகாரங்களை வழங்க முடியாது. வடக்கு மற்றும் கிழக்கை இணைக்கும் நடவடிக்கையை நாம் செய்ய மாட்டோம். எம்மால் முடியுமானதை முடியுமென கூறுவோம். முடியாததை முடியாது எனகூறுவோம் நாமல் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# முள்ளிவாய்க்காலில் பொதுச்சுடரினை ஏற்றி

## முல்லைத்தீவில் "சங்கு" ஊதி தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தார் அரியநேந்திரன்





ஜனாதிபதி வேட்பாளார் அரியநேந்திரன் 18 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணியளவில் முள்ளிவாய்க்காலில் பொதுச்சுடர் ஏற்றி ஜனாதிபதி தேர்த்தலுக்கான முதலாவது பிரச்சாரத்தினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது வெற்றிக்காக மக்கள் மத்தியில் பிரச்சார நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுதூபிக்கு பொது சுடரேற்றி வழிபட்டு தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் மக்களை பிரதி நிதித்துவப் படுத்தி ஜனாதிபதி வேட்பாளர் அரியநேந்திரன் மற்றும் அவரோடு இணைந்து உறுப்பினர்கள் தேர்தலுக்கான முதலாவது பிரச்சாரத்தை ஆரம் பித்து வைத்துள்ளனர்.

குறித்த, அஞ்சலியின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் துளசி, சமூக செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான நிலாந்தன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதனையடுத்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் அவர்களது முதலாவது தேர்தல் பிரச்சார கூட்டம் முல்லைத்தீவு மண்ணில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் முதலாவது தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் சகல பிரசாரக்கூட்டங்களிலும் பொன்னாடை போர்த்துதல், மாலைகள் அணிவித்தல், ஆரத்தி எடுத்தல் போன்ற கௌரவிப்பு செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவற்றைத் தவிர்த்து பிரசாரப் பணிகளுக்கான ஏற்பாடுகளை முற்கூட்டியே அறிவிக்குமாறு, ஏற்பாட்டாளர்களிடம் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

முல்லைத்தீவில் மக்கள் மாலைகளை அணிவித்ததாகவும் அதனை தாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், இனி வரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவ்வாறான கௌரவிப்பு செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு தாம் அன்புடன் கேட்டுக் கொள்ளவதாகவும் தெரிவித்துள்ளார்.

## 50வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முருகேசு நடராஜா

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 50வது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு முருகேசு நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.






கனடா - அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக் கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# எவருடனும் பணியாற்ற இந்தியா தயார்! இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு!

இலங்கை மக்கள் தெரிவு செய்யும் எந்த அரசுடனும் இணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா தயார் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கண்டியில் பௌத்த மதத் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இலங்கை மக்களின் தெரிவுகளை மதிப்பது குறித்த இந்தியாவின் உறுதிப்பாட்டையும், இரண்டு நாடுகளில் எவர் ஆட்சி செய்தாலும் வலுவான இருதரப்பு உறவுகளை பேணுவது குறித்த உறுதிப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தினார்.

இலங்கை மக்களே தெரிவு செய்ய வேண்டியவர்கள். இலங்கை தீர்மானிக்கும், இலங்கை மக்கள் தீர்மானிக்கும் எதனையும் நாங்கள் மதிப்போம். இலங்கை மக்கள் தெரிவு செய்யும் எந்த அரசுடனும் இணைந்து பணியாற்றுவோம். எங்கள் நட்பு என்பது அனைத்து இலங்கைக்கும், அனைத்து இலங்கையர்களுக்குமானது.

இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் பாலம் குறித்து கருத்துத் தெரிவித்த இந்தியத் தூதுவர்.

இதற்குச் சில காலம் எடுக்கும். இது நீண்ட திட்டம். இது ஒரிரு வருட திட்டம் இல்லை. எவ்வளவு காலம் நீடிக்கும் எனத் தெரிவிக்க முடியாது. ஐந்து, ஆறு



வருடங்கள் நீடிக்கலாம். இரு தரப்பும் இணைந்து பணியாற்று வதிலேயே இது தங்கியுள்ளது. இதனைப் பரஸ்பர இணக்கப்பாடு புரிந்துணர்வுடனேயே முன்னெடுப்போம் எனவும் தெரிவித்தார்.

# இலங்கை - இந்தியா இணைக்கும் பாலம்:- மல்வத்தை பீடாதிபதி கவலையும் எதிர்ப்பும்!

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் விதத்தில் உத்தேச பாலத்தை அமைப்பது குறித்து மல்வத்த பீடத்தின்மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவுடனான சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகருடனான



சந்திப்பின்போது உத்தேச பாலம் குறித்த கரிசனையை வெளியிட்டுள்ள அவர் பாலத்தை அமைப்பது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் அதன் காரணமாக ஏற்படக் கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளார்.

உத்தேச பாலத்தினால் ஏற்படக் கூடிய அரசியல் விளைவுகள் போதைபொருள் கடத்தல் அதிகரிப்பு குறித்தும் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரர் கருத்து தெரிவித்துள்ளார்.

# தாக்குதலுக்கு உள்ளான காருடன் வந்து கதிரைகளுடன் பேசிய சரத்



முன்னாள் இராணுவ தளபதியும், சமகால ஜனாதிபதி வேட்பாளரான சரத் பொன்சேகாவின் நிலை பரிதாபமாக மாறியுள்ளது. அவரது முதலாவது தேர்தல் பிரசார கூட்டம் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொன்சேகாவின் குறித்த கூட்டத்திற்கு ஐந்து பேர் கூட வராதமை பெரும் ஏமாற்றத்தை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது. மேடையில் பொன்சேகா உட்பட சுமார் 10 பேர் இருந்தனர். மேலும் மேடையின் முன் இருக்கைகளில் யாரும் அமரவில்லை.

அத்துடன் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் தாக்குதலுக்கு உள்ளான காரையும் லொறியில் ஏற்றி மேடைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தது.

அதன் காட்சிகளும் புகைப்படங்களும் சமூக வலைதளங்களில் பதிவிடப்பட்டுள்ளது. மேலும் கூட்டத்தை 5 பேர் மட்டுமே நின்ற நிலையில் பார்த்து விட்டு செல்வதனையும் அவதானிக்க முடிந்துள்ளது.



இதேவேளை 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா, அப்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு பெரும் சவால்மிக்க நபராக இருந்தார்.

எனினும் 14 வருடங்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சரத் பொன்சேகா பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ள சரத் பொன்சேகாவின் பிரசார கூட்டத்திற்கு எவரும் வராதமை தொடர்பில் அவர் பதிலளித்துள்ளார். தனது பிரசார முயற்சிகள் நேர்மையானவை எனவும் பொதுக் கூட்டணிக்கு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யவில்லை என்றும் மது அல்லது சாப்பாடு கொடுத்து மக்களை பேருந்துகளில் அழைத்து வரவில்லை என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மேலும், தனது தேர்தல் பிரசாரத்திற்கு முந்தைய நாள் இரவு பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத பகுதிகளில் 50க்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஒலிபெருக்கிகளை பொருத்தவும் அறிவுறுத்தப்பட்டது. எனது பொதுக்கூட்டத்தில் ஒரு நபராக இருந்தாலும், ஐந்து பேர், பத்து பேர், ஐம்பது பேர் அல்லது நூறு பேர் கலந்து கொண்டாலும், 1000 பேரை விட எனது விசுவாசமான கட்சி ஆதரவாளர்கள் என்பதால், அவர்கள் எனக்கு முக்கியம் என குறிப்பிட்டார்.


**கனடா வாழ் துன்னாலை - கரவை மக்கள் மன்றம்**

**22வது ஆண்டு "ஞானதீபம்" 2024 கலைவிழா**

கனடா வாழ் துன்னாலை — கரவை மக்கள் மன்றம் நடாத்தும் 22வது ஆண்டு ஞானதீபம் 2024 பல்சுவை கலை விழா எதிர்வரும் September 07, 2024 சனிக்கிழமை, மாலை 5.00 மனிக்கு Thamilisai Kala Mandram- 1120 Tapscott Road Unit #3 Scarborough Ontario M1X 1S9 இல் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற உள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தொடர்புகட்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477


# புலம்பெயர் அமைப்புகள் புரிந்து கொள்ளுமா?

கனடிய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை மீளவும் புதுப்பித்திருக்கின்றது. 2006ஆம் ஆண்டு கனடா விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக தடை செய்தது. ஒவ்வோர் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தடையை மறுபரிசீலனை செய்து மீளவும் உறுதிப்படுத்துகின்றது.

நாடுகளின் வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்கப் போராடுவதாகவும் தொடர்ந்து சத்தம் போட்டால் அது சாத்தியம் என்றும் இப்போதும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் இருக்கின்றனர். புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மத்தியில் தங்களின் 'லொபி'யால் கனடாவின் வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்க முடியுமென்று நம்பிக் கொண்டிருப்போர் இருக்கின்றனர்.

கனடாவில் தமிழ் புலம்பெயர் சமூகத்தின் தலையீடு எத்தகையது? தங்களின் தலையிடும் ஆற்றலை அவர்கள் எவ்வாறு புரிந்து வைத்திருக்கின்றனர்? எல்லாவற்றையும் அறிவுக் கண்கொண்டு நோக்காமல் வெறும் உணர்வின் வழியாக அணுகுவதன் விளைவாக தமிழ்த் தேசிய அரசியல் சூழல் தொடர்ந்தும் அறிவுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட சமூகமாகவே காட்சியளிக்கின்றது.

உண்மையில், ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ் புலம்பெயர் சமூகம் தான் அரசியலை அதிகம் அறிவுபூர்வமாக அணுகுபவர்களாக இருந்திருக்க வேண்டும். அரசியலை அறிவுபூர்வமாக அணுகுவதில் தாயகத்துக்கு அவர்கள் வழிகாட்டியிருக்க வேண்டும். ஆனால், நிலைமையோ தலைகீழாக இருக்கின்றது.

ஒப்பீட்டு அடிப்படையில் அறிவுசார் மேற்குலகத்தோடு அதிகம் ஊடாடுவதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கும் தமிழ் புலம்பெயர் சமூகம் தொடர்ந்தும் கற்பனைகளில் மூழ்கிக் கிடக்கும் தரப்பாகவே இருக்கின்றது. அவர்களின் புரிதல் தவறானது என்பதை அவ்வப்போது மேற்குலகம் நிரூபித்தாலும் கூட தமிழ் புலம்பெயர் சமூகம் இதன் தாற்பரியத்தை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மேற்குலகம் சர்வதேச பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்திருக்கின்றது.

புலம்பெயர் அமைப்புகள் தங்களை ஆற்றலுள்ளவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த போது தான் 2006இல் கனடா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்தது. கனடாவில் ஈழத் தமிழர்கள் அரசியலில் செல்வாக்கு செலுத்துவதாக எண்ணிக் கொண்டிருக்கும் போது தான் கனடா புலிகளைத் தடை செய்தது. கனடிய பாராளுமன்றத்தில் ஈழத்தமிழர்களுக்கு குரல் இருந்த போதிலும் கூட தமிழர்களால் எதனையும் செய்ய முடியவில்லை. இதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு புலம்பெயர் சமூகம் புதிதாக சிந்திக்க முற்படவில்லை.

இப்போதும் பழைய கற்பனாவாதத்துக்குள் மட்டுமே தன்னை சுருக்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ் புலம்பெயர் சமூகம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, கனடாவில் சுமார் பதினான்கு இலட்சம் இந்திய புலம்பெயர் சமூகத்தினர் கனடாவில் வாழ்கின்றனர். கனடாவில் சீக்கிய தீவிரவாத அமைப்பை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கனடாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவு கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இந்த இடத்தில் இந்திய புலம்பெயர் சமூகத்தால் என்ன செய்ய முடிந்தது? பதினான்கு இலட்சம் இந்திய புலம்பெயர் சமூகத்தால் கனடாவின் வெளிவிவகார கொள்கையில் தலையீடு செய்ய முடியாத போது மூன்று இலட்சம் ஈழத்தமிழ் புலம்பெயர் சமூகத்தால் கனடிய வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்க முடியுமென்று எண்ணுவது எந்த அடிப்படையில் சரியானது? இந்த விடயத்தை அறிவுபூர்வமாக அணுகினால் மட்டுமே புலம்பெயர் சமூகத்தின் ஆற்றல் என்ன அதனால் தாயகத்திலுள்ள மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்று தீர்மானிக்க முடியும்.

செய்ய முடியாதவற்றை செய்ய முடியுமென்று நம்பிக் கொண்டிருப்போரால் ஓர் இனத்துக்காக எதனையும் செய்ய முடியாது. கனடா ஓர் அரசு. உள்நாட்டில் வாக்குகளை திரட்டுவதற்காக கனடிய அரசியல்வாதிகள் பேசுவதை கனடாவின் கொள்கை நிலைப்பாடாக கருதும் தவறை புலம் பெயர் சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

# எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவில்லை கத்தோலிக்க திருச்சபை தெரிவிப்பு!

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்த வேட்பாளருக்கும் தனது அங்கீகாரத்தை வழங்கப்போவதில்லை என இலங்கை கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்துள்ள போதிலும் எந்த வேட்பாளருக்கும் ஆதரவை வெளியிடப்போவதில்லை என கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

நாங்கள் எவருக்கும் அங்கீகாரத்தை வழங்க மாட்டோம் என கொழும்பு பேராயரின் பேச்சாளர் சிறில்காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

மக்களே தங்களிற்கு யார் வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும் நாங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிடும் வேட்பாளர்களுடன் நாட்டில் கத்தோலிக்க மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த பேச்சு வார்த் தைகளில் மாத்திரம் ஈடுபடுகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார உட்பட பல ஜனாதிபதி வேட்பாளர்கள் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்

எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்காத போதிலும் கத்தோலிக்க மக்கள் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலிற்கு நீதியை நிலைநாட்டுவது குறித்தும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வோம் என சிறில்காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.




கல்வி போன்ற விடயங்கள் குறித்து ஆராயவே நாங்கள் அவர்களை சந்தித்தோம் இவை கத்தோலிக்கர்களுடன் தொடர்புபட்ட விடயங்கள் இல்லை தான் என தெரிவித்துள்ள சிறில் காமினி பெர்ணாண்டோ மீனவர்கள் விவகாரம் குறித்தும் பேசினோம் கத்தோலிக்கர்களில் பெருமளவு மீனவர்கள் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# 80 வருடங்களின் பின் நாஜி முகாமின் செயலாளருக்கு தண்டனை வழங்கியது!

முன்னாள் நாஜி முகாமின் செயலாளராகப் பணி புரிந்த யேர்மன் பெண் ஒருவருக்கு யேர்மனி நீதிமன்றம் தண்டனையை உறுதி செய்தது. 99 வயதான இர்ம்கார்ட் எஃப்.க்கு (Irmgard F) என்ற பெண் Stutthof வதை முகாமில் செயலாளராக பணியாற்றிய தற்காகச சிறார் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டார்.

யேர்மனியின் பெடரல் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸ் (BGH) கடந்த 20 ஆகஸ்ட் 2024 செவ்வாயன்று 99 வயதான குறித்த பெண் 10,000க்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றதற்கு உடந்தையாக இருந்த வதை முகாமில் செயலாளராக பணியாற்றியமைக்கான தண்டனையை உறுதி செய்தது.

1943 மற்றும் 1945 க்கு இடைப்பட்ட காலத்தில், 18 முதல் 19 வயதிற்குள் நடந்த குற்றங்கள் காரணமாக, பிரதிவாதி சிறார் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். முகாமில் நடந்த கொலைகள் பற்றி அவளுக்குத் தெரியாது



என்று வாதிட்டு, அவர் குற்றமற்றவர் எனக் கண்டறியப்பட வேண்டும் என்று பாதுகாப்பு வழக்கறிஞர்கள் அழைப்பு விடுத்தனர்.

அவரது தண்டனைக்குப் பிறகு, பாதுகாப்பு ஃபெடரல் நீதிமன்றத்தில் தீர்ப்பை மேல்முறையீடு செய்தது. 2021 ஆம் ஆண்டில், அவர் தனது முதியோர் இல்லத்திலிருந்து தப்பிச் சென்று விசாரணையிலிருந்து தப்பிக்க முயன்ற போது பிடிபட்டார்.

பிரதிவாதியின் தண்டனை இரண்டு ஆண்டுகள் இடைநீக்கம் செய்யப்பட்ட தண்டனை என்பது இறுதியானது என்று தலைமை நீதிபதி கேப்ரியல் சிரேனர் கூறினார்.

ஜேர்மனியில் உள்ள யூதர்களின் மத்திய கவுன்சிலின் தலைவர் ஜோசப் ஷஸ்டர், தீர்ப்பை வரவேற்றார்.

Stutthof வதைமுகாமில் 65,000 பேர் இறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் யூத கைதிகள், போலந்து கட்சிக்காரர்கள் மற்றும் சோவியத் ரஷ்ய போர் கைதிகளும் அடங்குவர்.


## மணமகள் தேவை

கனடாவில் பிறந்த பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து அரசாங்க வேலை செய்யும் 26 வயது நிரம்பிய மகனுக்கு தாயார் மணமகளைத் தேடுகின்றார். மணமகள் நல்ல குணமான, அழகான, படித்த, வேலையில் இருப்பவராக இருக்க வேண்டும். சாதி, மதம், சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.

தொடர்புகளுக்கு:- 1929 5037022



In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)

Math & Physics Tutoring
(For High School Students)



Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# பொதுவேட்பாளர் அரியநேந்திரனுக்கே ஆதரவு! அதி மூத்த விடுதலைப்புலிப் போராளி பசீர் காக்கா



இறுதி யுத்தம் முடிந்து 15 வருடங்களாகி விட்டது. பேச்சு வார்த்தை, பேசுதல் என்பவற்றை தொடர்ந்து கேட்டு காது புளித்துப் போய் விட்டது. தமிழரின் ஆறாம் அறிவைக் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் புதுப்புது விளக்கங்களைக் கேட்டாயிற்று. எனவே நாம் இனி அடுத்த கட்டத்தை ஜனநாயக வழியில் மேற்கொள்வோமென விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அதி மூத்த போராளி காக்காண்ணை என்று அறியப்பட்ட முத்துக்குமார் மனோகர் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் 21 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேலும் கருத்து வெளியிடுகையில் மாவீரர் அறிவிழியின் தந்தையாக எனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றேன்.

அண்ணர் அரியநேத்திரன் 1984 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அவரது சொந்தக் கிராமமான அம்பிளாந்துறையில் அறிமுகமானவர். போராட்ட பங்களிப்பு காரணமாகவே 2004 பொதுத் தேர்தலில் போட்டியிடத் தேர்வானவர்களில் ஒருவராக அவரது பெயர் கிளிநொச்சியிலிருந்து அறிவிக்கப்பட்டது. இறுதி யுத்தத்தின் பின்னர் நெருக்கடிகளின் மத்தியிலும் மாவீரர் நினைவேந்தல்களை எப்படியோ தொடர்ச்சியாகச் செய்து வந்தவர்.

தமிழ்த் தேசியம் என்பதை வெறும் எதிர்ப்பரசியல் என்று கொச்சைப் படுத்தியவர்களும் உண்டு. ஆனால் எம்மை யார் என உணர வைத்து உணர்வோட்டத்தில் ஒன்றிக் கலக்க வைத்த விடயம் அது. எல்லாவிதத் தடைகளையும் துரோகங்களையும் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முன்னோக்கிச் செல்வோம். புலம் பெயர் உறவுகளும் தாயகத்திலுள்ளோரும் கைகோர்த்து அதனை சாத்தியமாக்குவோம் எனவும் பசீர் காக்கா அழைப்பு விடுத்துள்ளார்.

# இனப்படுகொலை "நினைவுச் சின்னம்" விவகாரம் ஸ்ரீலங்கா அரசின் கோரிக்கையை நிராகரித்த பிரம்டன் மேயர் பற்றிக் பிரவுனும் அதிகாரிகளும்



தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பை கனடாவின் பிரம்ப்டன் மாநகர முதல்வரும் அதிகாரிகளும் புறக்கணித்துள்ளனர். முன்னதாக, இந்த நினைவுச் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு இலங்கையின் எதிர்ப்பை முன் வைத்து இலங்கைத் தூதரக பொறுப்பதிகாரி துஷார ரொட்ரிகோ, பிரம்ப்டன் மாநகர முதல்வருக்கு கடிதம் எழுதியிருந்தார். அத்துடன், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷை அழைத்து இலங்கையின் எதிர்ப்பைப் பதிவு செய்தார்.

எவ்வாறாயினும், இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசாங்கம் கூறுவதைக் கண்டு தனது அலுவலகம் அஞ்சப்போவதில்லை என பிரம்டன் முதல்வர் பெற்றிக் பிரவுன், கனேடிய வெளியுறவு அமைச்சருக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் தமிழ் சமூகம் தங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் மாவீரர்களை நினைவு கூருவதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் முயற்சி செய்யலாம். ஆனால், கனடாவில் அவர்களால் அதைச் செய்ய முடியாது. இந்த நிலையில் கனடாவில் நினைவேந்தல்மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளை தடுக்க முயல்வது, உள்நாட்டு விடயங்களில், வெளிநாட்டு தலையீடாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழர் அரசியலின் எதிர்காலம்?

தமிழ் தேசிய அரசியல் என்பது அடிப்படையில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய கட்சிகள் எந்தளவுக்கு அரசியல் பிரதிநிதித்துவங்களை தக்க வைத்துக் கொள்கின்றன என்பதில்தான் தங்கியிருக்கின்றது. 2020 பாராளு மன்ற தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரும் பின்னடைவு களை சந்தித்தது. வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை பிரதி நிதித்துவம் செய்யாத கட்சிகள் குறிப்பிடத் தக்களவு வாக்குகளை பெற்றிருந்தன.

இது தெளிவான செய்தியொன்றை வெளிப்படுத்தியது. அதாவது, வடக்கு, கிழக்கில் மக்கள் பல் வேறு நிலையில் சிந்திக்கின்றனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ராஜபக்ஷவின் மொட்டுச் சின்னத்திலும் ஒரு தமிழர் வெற்றி பெற முடிந்தது.

இது ஓர் எச்சரிக்கையை வழங்கியிருக்கின்றது. தொடர்ந்தும் தமிழ் மக்களை வடக்கு, கிழக்கு தழுவியதாக, தமிழ் தேசிய அரசியலில் தக்கவைக்க முடியுமா? வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் தொடர்ந்தும் வலுவான நிலையில் நிற்கக் கூடிய அரசியல் சூழல் படிப்படியாக பலவீனமடைந்திருக்கின்றது. இந்த சவாலை எதிர்கொள்ள முடிந்தால் மட்டுமே தமிழ் தேசிய அரசியல் நிலைக்கும். இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், தமிழ் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் மக்களின் வாக்குகளை முடிந்தவரையில் திரட்டுவதானது, தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் அனைவரதும் வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு என்பது அடிப்படையில் தமிழ் தேசிய கட்சிகளை வலுப்படுத்தும் முயற்சியாகவும் அர்த்தம் பெறுகின்றது.

ஆனால், இந்தப் போக்கை இலங்கை தமிழ் அரசு கட்சியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இதுவரையில் புரிந்து கொள்ளவில்லை. இலங்கை தமிழ் அரசு கட்சி, இந்த அரசியல் யதார்த்தத்தை புரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை முயற்சிக்கவில்லை என்பதை விடவும், தனிநபர் சண்டைகளால் அக்கட்சி சிதைந்து கொண்டிருக்கின்றது. ஆனால், தங்களின் கட்சி சிதைந்து கொண்டிருக்கின்றது என்பதைக் கூட அந்தக் கட்சியின் உறுப்பினர்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பது தான் துரதிர்ஷ்டவசமானது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸை (முன்னணி) பொறுத்த வரையில் தமிழ் தேசியத்தின் காவலர்கள் போன்று தங்களை காண்பித்துக் கொண்டிருப்பதை தவிர தமிழ் தேசிய அரசியலை பாதுகாக்கும் எந்தவோர் ஆக்கபூர்வமான நகர்வுகள் எதனையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

உண்மையிலேயே முன்னனி என்னும் பெயரில் இருப்பவர்கள், தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வது உண்மையாயின், இப்போதும் காலம் கடந்து விடவில்லை, அவர்கள், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டுடன், தங்களை இணைத்துக் கொள்ளலாம்

ஆகக் குறைந்தது தங்களின் கீழ்த்தரமான கருத்துக்களையாவது தவிர்க்கலாம். ஏனெனில் தமிழ் தேசியத்தை பாதுகாப்பதாகக் கூறிக் கொண்டு, அதனை படிப்படியாக சிதைக்கும் வேலைகளையே முன்னணி செய்து வருகின்றது. மொத்தத்தில் தமிழ் தேசிய அரசியல் குற்றுயிருடன் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அதற்கு புத்துயிரளிக்கக் கூடிய நிலையில் எந்தவொரு கட்சியும் வலுவுடன் இல்லை. இன்றைய நிலையில் தனிக்கட்சியாக எந்தவொரு கட்சியும் வலுவான நிலையில் இல்லை. ஒப்பீட்டடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சி வலுவான தோற்றத்தோடு இருந்தது.

ஆனால் தற்போது அந்த நிலைமையும் மாறி வருகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால், தமிழ் தேசியத்தின் எதிர்காலம் என்பது பெரிய கேள்விக் குறியாகும்.

# நிறவெறி - வெள்ளை ஆதிக்கம் அமெரிக்காவில் இடமில்லை - பைடன்



அமெரிக்க ஜனநாயகத்தினை பாதுகாப்பதற்கான மிகச்சிறந்த நம்பிக்கை கமலா ஹாரிஸ் என ஜனாதிபதி ஜோபைடன் தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் ஜனநாயக கட்சியின் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார். நன்றி ஜோ என்ற கோசங்களிற்கு இடையில் ஜோ பைடன் தனது மகள் ஜோ ஆஸ்லேயுடன் மேடையில் தோன்றினார். தனது மகள் தன்னை அறிமுகப்படுத்திய பின்னர் கண்ணீருடன் உரையாற்றிய பைடன் நீங்கள் சுதந்திரத்திற்காக வாக்களிக்க தயாரா? அமெரிக்காவிற்கும் ஜனநாயக கட்சிக்கும் வாக்களிக்க தயாரா? கமலா ஹரிசையும் டிம் வோல்சினையும் தெரிவு செய்ய தயாரா என கேள்வி எழுப்பினார்.

டொனால்ட் டிரம்பினை பல முறை தாக்கிய பைடன் ஹரிசிற்கான மிகச் சிறந்த தொண்டனாக விளங்குவேன் என்றார். நான் ஜனாதிபதி பதவியை நேசிக்கின்றேன் ஆனால் அதனை விட அமெரிக்காவை நேசிக்கின்றேன் என அவர் தெரிவித்தவேளை மாநாட்டில் திரண்டிருந்தவர்கள் நாங்கள் ஜோவை நேசிக்கின்றோம் என கோசம் எழுப்பினர்.

அமெரிக்க பொருளாதாரத்தை வலுப்படுத்தியது, சர்வதேச ரீதியில் அதன் நட்புறவை வலுப்படுத்தியது போன்ற தனது அரசாங்கத் தின் சாதனைகளை பட்டியலிட்ட பைடன் தனக்கு பின்னர் வெள்ளை மாளிகைக்கு கமலா ஹாரிசினை தெரிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்காவிற்கு தொடர்ந்தும் பாதிப்பு ஏற்படுத்தி வரும் நிற வெறி வெள்ளை மேலாதிக்கம் போன்றவற்றை சாடியுள்ள பைடன் அவற்றிற்கு அமெரிக்காவில் இடமில்லை என தெரிவித்துள்ளார்.

# வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தவர்களை எங்கே புதைத்தீர்கள்? விவகாரங்களை மூடி மறைக்க வேண்டாம்! - புதைகுழி முன்பாக போராட்டம்

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரம் தொடர்பாக பாரிய கவன யீர்ப்பு போராட்டம் ஒன்று கொக்கு தொடுவாய் மனித புதைகுழிக்கு முன்பாக 20 ஆகஸ்ட் 2024 செவ் வாய்க்கிழமை இடம்பெற்றது.



முல்லைத்தீவு கொக்குதொடுவாய் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வு பணி யானது மூன்று கட்டமாக இடம் பெற்று 52 மனித எச்சங்கள் அகழ்ந் தெடுக்கப்பட்ட நிலையில் மூடப்பட்டு ள்ளது. குறித்த அகழ்வு பணியின் போது கண்டு பிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான எவ்வித உண்மைகளும் இதுவரை வெளிக் கொண்டு வரப்படவில்லை. எனவே கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண் டாம். எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும் என கூறி குறித்த போரா ட்டம் இடம் பெற்றிருந்தது.





முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப் பினர் துரைராசா ரவிகரன், பொது மக்கள், சமூக செயற்பாட்டா ளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்து தமக்கான நீதி கோரி போராடி யிருந்த னர். குறித்த போராட்டத்தில் கொக்கு தொடுவாய் மனித புதைகுழியை சுற்றி கண்ணீர் விட்டு கதறி அழுததோடு குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் உண்மையை மௌனமாக் காதே: கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் சாட்சிகளை அச்சுறுத் தாதே! கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி: ஸ்ரீலங்கா இரா ணுவமே பொறுப்புக்கூற வேண்டும்! OMP ஒரு ஏமாற்று வேலை: காணா மல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை!, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இலங்கை இராணு வத்தின் பங்கை அம்பலப்படுத்துங்கள்!, வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது அன்புக் குரியவர்களை எங்கே கொன்று புதை த்தீர்கள்? உள்ளிட்ட பல்வேறு கோசங் கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கி யவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கு த்தொடுவாய் மனிதபுதைகுழி கடந்த ஆண்டு 2023.06.29 ஆம் திகதி இனம்காணப்பட்ட நிலையில் மூன்று கட்டங்களாக அகழ்வு பணிகள் முன் னெடுக்கப்பட்டு இதுவரை 52 மனித எச்சங்கள் மீட்கப்பட்ட நிலையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களின் போது 40 மனித எச்சங்கள் மீட்கப்பட்ட நிலை யில் மூன்றாம் கட்ட அகழ்வு கடந்த 04.07.2024 அன்று ஆரம்பமாகி 15.07. 2024 வரை இடம்பெற்று 12 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது வரை குறித்த விடயம் தொடர்பாக எவ்வித உண்மைகளும் வெளிவராத நிலையில் குறித்த போராட்டம் முன் னெடுக்கப்பட்டிருந்தது.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டி ருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தமிழ் பொது வேட்பாளர்:- காசு கொடுத்து குத்து மாடு வாங்கிய கதை!

கட்டுரையாளர்:
- அழகு குணசீலன் -

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் திருவிழாவுக்கு கொடியேறியிருக் கிறது. செப்டம்பர் 21ம் திகதி தேரோட்டம். மறுநாள் தீர்த்த உற்சவம், திருவேட்டை. இந்த நிலையில் தமிழ் பொது வேட்பாளர் பற்றி அதிகம் பேசி, கூடிக் கலைந்தவர்கள் தமிழ்த்தரப்பினர் தான். ஆனாலும் அவர்களால் ஒரு தமிழ்பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி தோல்வியில் முடிவடைந்திருக்கிறது.

ஏனெனில் தமிழ்மக்களின் பொது அமைப்புக்களின், தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் ஏகோபித்த தேர்வாக இல்லா விட்டாலும் பெரும்பான்மையோர் தேர்வாக ஒரு பொதுப் பிரஜையை வேட்பாளராக நிறுத்த முடியவில்லை என்பது முதல் தோல்வி.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துதல் என்ற எண்ணக் கருவின் இலக்குகளின் அடிப்படையில் இது தோல்வியடைந்துள்ளது. இதற்கான பொறுப்பு தமிழ்த்தேசிய பொதுக் கூட்டமைப்பு 14 பிரதிநிதிகளையும் கடந்தது.

1.பொதுவேட்பாளர் ஒருவர் கட்சிகளைக் கடந்த ஒரு பொதுப்பிரஜையாக இருக்க வேண்டும் என்பது ஒரு பொது நிபந்தனை.

2.வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு அளிக்கப்படுவதை தடுத்தல் மற்றோரு இலக்கு.

3. தமிழ்த்தேசிய கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரு பொதுவேட்பாளரை நியமித்தல். இது கூட வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் உள்வாங்கியதாக இருந்திருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் கூறுகின்ற ஒட்டு மொத்த தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமையும்.

4.வடக்கு -கிழக்கு தமிழ்மக்கள் ஓரணியில் ஒற்றுமையாக தமிழ்த்தேசிய அரசியலில் பயணிக்கிறார்கள் என்பதை காட்டுதல்.

5.இதன் ஊடாக சர்வதேசத்தின் கவனத்தை தமிழ்த்தேசியம் நோக்கி திருப்பி அங்கீகாரத்தை பெறல்.

இவற்றில் முதல் மூன்று இலக்குகளும் எட்டப்படவில்லை. முதல் மூன்றும் அடையப்படவில்லை என்பதன் அடிப்படையில் இறுதி இரண்டு இலக்குகளும் அடைய முடியாதவையாகின்றன. இதனை மதிப்பீடு செய்வதற்கு தேர்தல் முடியும்வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. முதல் கோணல் முற்றும் கோணல்.

தமிழரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் இன்னும் பதவிகளில் இருந்து கொண்டு சுயேட்சையாகவும், வேறு சின்னத்திலும் போட்டியிடுவது தமிழ்ப் பொதுவேட்பாளர் கருத்தியலுக்கு முரணானது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொதுவேட்பாளர் நிலையுடன் ஒப்பிடமுடியாது.

வடக்குகிழக்கு தமிழ்மக்களின் வாக்குகள் தென்னிலங்கை வேட்பாளருக்கு அளிக்கப்படுவதை தடுத்தல். இன்றைய நிலையில் இது முற்று முழுதாக நடைமுறைச் சாத்தியமும், ஜதார்த்தமும் அற்ற இலக்கு. கடந்த ஜனாதிபதி, பாராளுமன்ற தேர்தல்களில் இது சாத்தியப்படவில்லை. தமிழ் மக்கள் கடந்த காலங்களில் தென்னிலங்கை கட்சிகளுக்கு அளித்த வாக்குகளின் தொகை தொடர்ச்சியாக அதிகரித்தும், தமிழ்த்தேசிய கட்சிகளுக்கு அளித்த வாக்குகள் தொகை வீழ்ச்சியடைந்தும் வந்துள்ளது.

இந்த நிலையில் தமிழ்மக்கள் தமிழ்த் தேசிய கட்சிகளை மட்டும் தங்கள் ஜனநாயக தேர்வாக கொள்ளவில்லை. ஒரு பகுதி மக்கள் வடக்கு -கிழக்கு மாற்று தமிழ்க்கட்சிகளுக்கும், தென்னிலங்கை தேசிய கட்சிகளுக்கும் தனித்தும், கூட்டணியாகவும் வாக்களித்து வந்துள்ளனர். கடந்த 2020 பாராளுமன்ற தேர்தலில் இது மிகத் தெளிவாக



வெளிப்பட்டது. வடக்கு -கிழக்கு தமிழ்மக்களின் ஒற்றுமையை காட்டுதல் என்ற விடயம் சிரிப்புக்கிடமானது. மக்களின் ஒற்றுமையை, ஒற்றுமையற்று பிளவுபட்டு நிற்கின்ற கட்சிகளால் எப்படி ஏற்படுத்த முடியும். தமிழ்க் காங்கிரஸ் ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க கோருகிறது. தமிழரசுக் கட்சி பொதுவேட்பாளரை நிராகரிக்கிறது.

மற்றைய தமிழ்த்தேசிய கட்சிகளும், கூட்டுக்களும் அணியாக, கட்சியாக பிளவுபட்டு நிற்கின்றன. இந்த நிலையில் எப்படி ஒற்றுமையை காட்டுவது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பையே கட்டிக்காக்க முடியவில்லை, கட்சியை கட்டிக்காக்க முடியவில்லை. தமிழ் மக்களின் ஒற்றுமையை முன்னுதாரணம் இன்றி எப்படி ஏற்படுத்துவது.

தமிழ்த்தேசிய பொதுக்கூட்டமைப்பின் தமிழ்ப் பொதுவேட்பாளர் மேற்குறிப்பிட்ட அனைத்து முரண்பாடுகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுத்து பெறுகின்ற வாக்குகள் ஒப்பீட்டளவில் வடக்கு — கிழக்கு தமிழர்களின் வாக்குகளில் எத்தனை வீதமாக இருந்தால் ஒற்றுமையை சர்வதேசத்திற்கு காட்ட உதவும். என்ற கேள்வியை இங்கு எழுப்புவது பொருத்தமானது.

1977இல் பாராளுமன்ற தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக பிரகடனம் செய்திருந்த போதும், வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு 50 வீதத்திற்கும் குறைந்த வாக்குகளே கிடைத்தன. அதிலும் அம்பாறை, புத்தளம் மாவட்ட முஸ்லீம்களின் வாக்குகளும் உள்ளடக்கப்பட்டே 50 வீதத்தை மயிரிழையில் தாண்டியிருந்தது.

இந்த அடிப்படையில் இன்றைய சூழலில் வடக்கில் ஈ.பி.டி.பி, அங்கஜன் அணி மற்றும் தென்னிலங்கை கட்சிகளும் கணிசமான அளவு வாக்குகளை பெறும் வாய்ப்புண்டு. சஜீத், ரணில், அநுரகுமார, நாமல்,.... என்று பங்கு வைக்கப்பட்டபின்னர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு இருக்கின்ற மிச்சம் எச்சம் எவ்வளவு? மறு பக்கத்தில் சிறியளவான மக்கள் தேர்தலை பகிஷ்கரிப்பர். குத்து விளக்கு கூட்டணிக்குள் முரண்பாடு நிலவுகிறது டீல் அரசியலில் கணிசமான வாக்குகளை தமிழ்ப்பொதுவேட்பாளர் இழப்பார். ஆக தேறிய மிச்சம் எவ்வளவு தேறும்?

கிழக்கில் இந்த நிலை வடக்கை விடவும் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு இன்னும் பலமாகவும், சாதகமாகவும் உள்ளது. சுமந்திரன் அணி தமிழ்ப் பொதுவேட்பாளரை நிராகரிக்கும் நிலையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பெற்ற வாக்குகளில் அரைவாசியை யாவது தமிழ்ப்பொது வேட்பாளர் பெறுவது அரிதிலும் அரிது.

வவுனியா கூட்டத்தில் முகமிழந்து வந்தவர்கள் தேர்தலில் எந்த முகத்தோடு பிரச்சாரம் செய்யமுடியும். சாணக்கியன் ஜனா மோதல் தமிழ் பொதுவேட்பாளரை பாதிக்கும். அரியநேந்திரனுக்கும் சாணக்கியனுக்கும் இடையிலான தனிப்பட்ட மோதல் மட்டக்களப்பில் வாக்களிப்பில் சரிவை ஏற்படுத்தும். தமிழரசுக்கட்சி என்பது மட்டக்களப்பில் சாணக்கியனை சுற்றியே சுழல்கிறது.

ரி.எம்.வி.பி, தமிழர் முற்போக்கு கட்சி போன்ற ரணில் ஆதரவு அணியும், சஜீத், நாமல், அநுரகுமார ஆதரவு அணிகளும் பெற்றுக் கொண்ட வாக்குகளில் மீதம் உள்ளவை தான் தமிழ்ப்பொது வேட்பாளரின் பங்காக இருக்கும்.

முஸ்லீம் காங்கிரஸ் பிளவு, மக்கள் காங்கிரஸ் பிளவு, மற்றும் இன்னும் ரணில் பக்கம் பாய பதுங்குகின்ற ஹிஸ்புல்லா, அமீர் அலி போன்றவர்களின் அரசியலும் தமிழ்மக்கள் மத்தியில் தமிழ்ப்பொது வேட்பாளர் காலத்திற்கு ஏற்ற, கிழக்குக்கு பொருத்தமான சரியான தீர்வா? என்ற கேள்வியை எழுப்பும் போது தமிழர் வாக்குகள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு அளிக்கப்படுவதில் செல்வாக்கு செலுத்த முடியும். அம்பாறையிலும், திருகோணமலையிலும் இதை விடவும் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது.

ஆக, வடக்கு கிழக்கில் தமிழ்ப்பொது வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கப்பட்டிருப்பது தமிழ்த்தேசிய அரசியலின் வீழ்ச்சியை பதிவு செய்வது டன், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பிராந்திய, தேசிய கட்சிகளின் வளர்ச்சியை எதிர்வு கூறுவதற்கான ஒரு கருத்துக்கணிப்பாக அமையும். தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் ம.சுமந்திரன் சொல்லியிருப்பது போல் செப்டம்பர் 20ம் திகதி அவர்கள் கட்சியின் முடிவை அறிவிக்கலாம். ஆனால் மக்கள் அதற்காக காத்திருக்கவில்லை. அவர்கள் தங்கள் வேட்பாளர் யார் என்பதை தீர்மானித்து விட்டார்கள். தமிழரசுக்கட்சியின் இந்த இழுத்தடிப்பு கூட சுமந்திரன் தனது பொதுவேட்பாளர் நிராகரிப்பு நிலைப்பாட்டை தேர்தலுக்கு பின்னர் நியாயப்படுத்துவதற்கான தந்திரோபாயம்.

சுமந்திரனின் ஒவ்வொரு நகர்வும் தமிழ்ப்பொது வேட்பாளரை செல்லாக் காசாக்கிறது. அதற்கு ஏன் வாக்களிப்பான் என்ற உணர்வை மக்களுக்கு ஏற்படுத்துகிறது. மக்கள் தென்னிலங்கை வேட்பாளரை தேர்வு செய்ய வாய்ப்பளிக்கிறது. தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழரசுக்கட்சியால் சத்தமின்றி சாகடிக்கப்படுகிறார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் காசு கொடுத்து குத்துமாடு வாங்கிய கதையாக முடியப் போகிறது. ''...சங்காரம் நிஜம் என்று சங்கே முழங்கு...''!

## சுன்னாகத்தில் காணி விற்பனைக்கு!

சுன்னாகத்தில் மின்சார நிலைய வீதியில் அரசாங்கத்தின் பரிசோதனை நடைபெற்று எந்தவொரு நிலத்தடி நீரும் அசுத்தமாக வில்லை என்ற சான்றிதழ் பெற்ற 8 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்த காணி. விலை பேசித் தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு:- 416 841 9600

## Chemistry & Math Tutoring

An Ontario-certified teacher with several years of experience teaching / tutoring Chemistry (Grades 11 & 12) and Math(Grades 9-12) would be available to help high school students in the same subjects for the academic year 2024/2025.

Contact 416 438-9157 (Home)
647 302-1763 (Cell)
email: mvignes11@gmail.com

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 ஆகஸ்ட் 2024 - 23 ஆகஸ்ட் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆதித்தன் இரத்தினகிரி

காங்கேசன்துறைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஆதித்தன் இரத்தினகிரி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 31 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு ஆதித்தன் இரத்தினகிரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கமலம் சுப்பிரமணியம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் முகுந்தன் குலசிங்கம்

அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் பெற்றோர்கள், உறவுகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 33வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு குமாரசாமி துரைராசா

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராசா அவர்களது 33வது ஆண்டு நினைவு நாள் 13 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி. இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு குமாரசாமி துரைராசா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 19வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 19வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2024 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 31 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது பிறந்த நாள் நினைவாக



### செல்வன் தனோஷன் ஜெயகுமார்

கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் தனோஷன் ஜெயகுமார் அவர்களது 26வது பிறந்த நாள் 10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள் சகோதரி மற்றும் அவரது நண்பர்கள் உறவுகள் இணைந்து அவரது நினைவாக அன்பு இல்லம் பாரதி இல்லம் ஆகிய இரண்டு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் தனோஷன் ஜெயகுமாரின் பிறந்த நாளில் அவரை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினர், நண்பர்களுடன் அன்பு இல்லம், பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கமலம் சுப்பிரமணியம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் முகுந்தன் குலசிங்கம் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் தனோஷன் ஜெயகுமார் அவர்களின் 26வது பிறந்த நாள் நினைவாகும். அன்றைய நாளில் அவரை நினைவு கூர்ந்து அவரது பெற்றோர்கள், சகோதரி, உறவுகள், நண்பர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரர் செல்வன் தனோஷன் ஜெயகுமார் அவர்களின் 26வது பிறந்த நாள் நினைவாகும். அன்றைய நாளில் அவரை நினைவு கூர்ந்து அவரது பெற்றோர்கள், சகோதரி, உறவுகள், நண்பர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை சமூகசேவையாளரும் தமிழ் மொழிப் பற்றாளருமாகிய திரு சிவன் இளங்கோ அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சிவன் இளங்கோ அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



11 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கீர்த்தன் மயூரிக்கா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஈசான் கீர்த்தனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஈசான் கீர்த்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



12 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் சுவர்ணா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



13 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு குமாரசாமி துரைராஜா அவர்களது 33வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சகிலா பிரபாகரன் அவர்கள் சீரடி பாபா உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழம் சமூக சேவையாளரும் இனப்பற்றாளருமாகிய தொழில் அதிபர் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



19 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசுக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழந்தார்கள்




20 ஆகஸ்ட் 024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமி பாலச்சந்திரனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி அபிராமி தனது பெற்றோர்கள் சகோதரனுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



15 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழம் சமூக சேவையாளரும் இனப்பற்றாளருமாகிய தொழில் அதிபர் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



21 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 19வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



07 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை பருத்தித்துறையைச் சேர்ந்த கப்டன் ஜேம்ஸ் (மாவீரன்) என்று அன்பாக அழைக்கப்படும் செல்வன் மணிவர்மன் சிவசுப்பிரமணியம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்

முற்றிலும்
புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்

# வானவில் 2024

## இயல்–இசை–நாடகம்

கோடை காலத்தின் குளிர் தென்றல்

SEPTEMBER 28 SATURDAY 6:00 PM

இரண்டு நாட்கள்

SEPTEMBER 29 SUNDAY 6:00 PM

**Armenian Youth Centre**
50 Hallcrown Pl. North York, M2J 1P6

## பேச்சுப் போட்டி

Saturday, August 24, 2024 at 9:00AM

**Talenta Academy**
2020 Ellesmere Road, Unit #2, Toronto, ON M1H 2Z8

முதலிடம் பெறுபவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464

உ

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஜெயதுர்க்கா தேவஸ்தானம் - மிசிசாகா

## அருள்மிகு திருமுருகப்பெருமானின் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

ஆரம்பம்
23-08-2024



பூர்த்தி
02-09-2024

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

நிகழும் குரோதி வருடம் ஆவணி மாதம் 7ம் நாள் (23-08-2024) ரேவதி நட்சத்திரமும், பௌர்ணமி திதியும், பஞ்சமி திதியும் கூடியுள்ள நன்நாள் வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி ஆவணி மாதம் 16ம் நாள் (01-09-2024) ஞாயிற்றுக்கிழமை சதுர்த்தசி திதியில் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று 10 தினங்கள் திருமுருகன் திருவிழா கலை நிகழ்ச்சிகளுடன் இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது. அன்பர்கள், அடியார்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து திருவிழா வழிபாடுகளில் கலந்து கந்தப்பெருமான் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

| சப்பறத்திருவிழா | தேர்த்திருவிழா | 1008 சங்காபிஷேகம் |
|---|---|---|
| 30-08-2024 வெள்ளிக்கிழமை | 31-08-2024 சனிக்கிழமை | 01-09-2024 ஞாயிற்றுக்கிழமை |

### திருவிழா விபரம்

| காலம் | | திருவிழா | அலங்காரம்/வாகனம் | உபயம் |
|---|---|---|---|---|
| 22-08-2024 | வியாழன் | கணபதிஹோமம் | - | திரு. பா. விக்னராஜா குடும்பம் |
| 23-08-2024 | வெள்ளி | 1ம் திருவிழா | ஓம்பிரணவஉபதேசம் | திரு. சி.அ. ஜயாத்துரை குடும்பம் - திருநெல்வேலி |
| 24-08-2024 | சனி | 2ம் திருவிழா | திருநடனம் | திரு. சிவகுமார், வனஜா கந்தசாமி குடும்பம் |
| 25-08-2024 | ஞாயிறு | 3ம் திருவிழா | கார்த்திகை | திரு. உதயமூர்த்தி கந்தையா குடும்பம் |
| 26-08-2024 | திங்கள் | 4ம் திருவிழா | தண்டபாணி | திரு. ம. கிருபாகரன் குடும்பம் |
| 27-08-2024 | செவ்வாய் | 5ம் திருவிழா | கைலாசவாகனம் | திரு. சந்திரேஸ்வரன் பரமசாமி குடும்பம் |
| 28-08-2024 | புதன் | 6ம் திருவிழா | மஞ்சம் | திரு. சாரங்கன் இராமகிருஸ்ணர் குடும்பம் |
| 29-08-2024 | வியாழன் | 7ம் திருவிழா | வேட்டை | திரு. பாஸ்கரன் கணேசானந்தன் குடும்பம் |
| 30-08-2024 | வெள்ளி | 8ம் திருவிழா | சப்பறம் | திருவாளர்கள் கார்த்திகேசு, தம்பையா, செல்வராசா, தெய்வேந்திரராசா, செல்வரட்ணம், பிரேமனந்தன் குடும்பத்தினர் |
| 31-08-2024 | சனி | 9ம் திருவிழா | தேர் | திரு. விஜயசேகர் விஜயரட்ணம் குடும்பம் |
| ,, | சனி | இரவுத்திருவிழா | தேரடி | திரு. சிவலிங்கம் குடும்பம் |
| 01-09-2024 | ஞாயிறு | 10ம் திருவிழா | 1008 சங்காபிஷேகம் | திரு. அசோக்குமார் வேலாயுதம் குடும்பம் |
| ,, | ஞாயிறு | இரவு | சுவாமி வீதியுலா | - |
| 02-09-2024 | திங்கள் | காலை | பிராயச்சித்தம் | திரு. வல்லிபுரம் கணேசன் குடும்பம் |
| ,, | திங்கள் | இரவு | திருக்கல்யாணம் | திரு. செந்தில்குமரன் ஆனந்தன் குடும்பம் |
| 03-09-2024 | செவ்வாய் | இரவு | வைரவர்மடை | திரு. சிவா சின்னத்தம்பி குடும்பம் |

காவடி, கற்பூரச்சட்டி மற்றும் பால்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் தயவு செய்து ஆலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.
தேர்த்திருவிழா அன்று வாகன தரிப்பிட வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**Jeyadurgha Dhevastanam - Mississauga**
1808 Drew Road, Mississauga, Ontario L5S 1J6
Telephone: 905-612-1856 • www.jeyadhurgatemple.com

CANADIAN TAMIL ARTIST'S ASSOCIATION
AND YUGAM RADIO, YUGAM TV
ARE PLEASED TO INVITE YOU TO
The 20'th
DRAMA FESTIVAL
Saturday 21st September 2024
Time: 4:30PM
TORONTO PAVILION
190 Railside Rd, North York, ON M3A 1A3
yogadasan.ruby@gmail.com



Ganapathi Raveendran
416 - 898 7284



Ruby Yogathasan
416 - 670 6522





வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# சங்கும் சிலிண்டரும்

இலங்கைத் தீவின் இரண்டு சுயேட்சை வேட்பாளர்கள் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய நிலைமைகள் வளர்ந்து வருகின்றனவா?

முதலாவது சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி. அவர் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறார். இலங்கைத்தீவின் தேர்தல் வரலாற்றில் ஒரு ஜனாதிபதி சுயேட்சைச் சின்னத்தில் போட்டியிடுவது இது தான் முதல் தடவை. உண்மையில் அவர் சுயேச்சை அல்ல. தாமரை மொட்டு கட்சியின் பெரும்பாலான பகுதி அவருக்கு பின் நிற்கின்றது. அப்படிப் பார்த்தால், அவர் தாமரை மொட்டுக்களின் மறைமுக வேட்பாளர்களில் ஒருவர்.

தாமரை மொட்டுக் கட்சி என்பது யுத்த வெற்றிக்கு பின் எழுச்சி பெற்றது. ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை குடும்ப மயப்படுத்தி நிறுவன மயப்படுத்தி கட்டியெழுப்பியதே பொதுஜன பெரமுன எனப்படும் தாமரை மொட்டுக் கட்சியாகும். ஆனால் ரணில் இப்பொழுது அதில் பெரும் பகுதியைச் சாப்பிட்டு விட்டார். இலங்கைத் தீவின் கட்சி வரலாற்றில் இறுதியாகத் தோன்றிய பெரிய கட்சியும் சிதையும் ஒரு நிலை. அதன் விளைவாகத் தான் ரணில் சுயேட்சையாக நிற்கிறார்.




ரணில் சுயேட்சையாக நிற்கிறார் என்பதற்குள் ஓர் அரசியல் செய்தியுண்டு. அது என்னவென்றால் இலங்கைத்தீவின் பிரதான கட்சிகள் யாவும் சிதைந்து போகின்றன என்பது தான். இலங்கைத் தீவின் மூத்த கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் வாரிசு அவர். ஆனால் அந்தக் கட்சி சிதைந்து சஜித் பிரேமதாசாவின் தலைமையில் வேறொரு கட்சி ஆகிவிட்டது. அது போல இலங்கைத் தீவின் மற்றொரு பெரிய பாரம்பரிய கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிதைந்து அதிலிருந்து தான் தாமரை மொட்டுக் கட்சி தோன்றியது. இப்பொழுது தாமரை மொட்டுக் கட்சியும் சிதையத் தொடங்கிவிட்டது.

இக்கட்சிகள் ஏன் சிதைக்கின்றன? ஏனென்றால் இலங்கைத் தீவின் ஜனநாயகம் சிதைந்து விட்டது. இலங்கைத் தீவின் ஜனநாயகம் எங்கே சிதையத் தொடங்கியது? இலங்கை தீவின் பல்லினத் தன்மையை சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் ஏற்றுக் கொள்ளத் தவறிய போதுதான்.

அதாவது இனப்பிரச்சினை தான் இலங்கைத் தீவின் பாரம்பரிய கட்சிகள் சிதைவதற்குக் காரணம். ஈழப் போரின் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் பாரம்பரிய கட்சிகள் இரண்டுமே சிதைந்து விட்டன. அந்த சிதைவிலிருந்து தோன்றிய மற்றொரு பெரிய கட்சியும் சிதையத் தொடங்கி விட்டது. அந்தச் சிதைவின் வெளிப்பாடு தான் அதாவது இனப்பிரச்சனையைத் தீர்க்கத் தவறினால் இலங்கைத் தீவின் ஜனநாயகம் மேலும் சிதையும் என்பதன் குறியீடு அது.

அவருடைய சின்னம் சிலிண்டர். அதுவும் ஒரு குறியீடு எந்த ஒரு சிலிண்டருக்காக நாட்கணக்கில் மக்கள் வரிசையில் காத்து நின்றார்களோ அதே சிலிண்டர் தான். அது நாட்டை பொருளாதார ரீதியாக அவர் மீட்டெடுத்ததன் அடையாளமாகக் காட்டப்படக்கூடும். எனினும் ஒரு நாட்டின் ஜனாதிபதி சுயேட்சையாகப் போட்டியிடும் அளவுக்கு நாட்டின் கட்சி நிலவரம் உள்ளது என்பதை அது காட்டுகிறது.அதாவது ரணில் ஒரு வெற்றியின் சின்னமாக இங்கு தேர்தலில் நிற்கவில்லை. சிதைவின் சின்னமாகத் தான் தேர்தலில்



நிற்கின்றார்.

மற்றொரு சுயேச்சை, தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன். அவருடைய சின்னம் சங்கு. அது மகாவிஷ்ணுவின் கையில் இருப்பது. போர்க்களத்தில் வெற்றியை அறிவிப்பது. சுடச்சுட பண்பு கெடாது வெண்ணிறமாவது. தமிழ்ப் பண்பாட்டில் பிறப்பிலிருந்து இறப்பு வரை வருவது. பிறந்த குழந்தைக்கு முதலில் சங்கில் பாலூட்டுவார்கள். திருமணத்தில் முதலில் பாலூட்டுவது சங்கில' தான். இறப்பிலும் சங்கு ஊதப்படும். அரியநேத்திரன் ஒரு குறியீடு. அவருடைய சின்னமும் ஒரு குறியீடு.

தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. தமிழ்ப்பொது நிலைப்பாடு என்பது பிரயோகத்தில் தமிழ் ஐக்கியம் தான். தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிக்கும் ஒருவர் சுயேட்சையாக நிற்பதன் பொருள் என்ன? அவர் கட்சி கடந்து நிற்கிறார் என்றும் வியாக்கியானம் செய்யலாம். அவர் ஒரு கட்சி பாரம்பரியத்தில் வந்தவர் தான். ஆனால் அந்தக் கட்சியின் வேட்பாளராக அவர் இங்கு நிற்கவில்லை. தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளின் பிரதிநிதியாகவும் அவர் தேர்தலில் நிற்கவில்லை. அவர் ஒரு பொதுநிலைப்பாட்டின் பிரதிநிதியாக நிற்கிறார். அதை ஏனைய கட்சிகள் ஏற்றுக் கொள்கின்றன. இது ஒரு புதிய பண்பாடு. கட்சிக்காக வாக்குக் கேட்காமல்,ஒரு தனி நபருக்காக வாக்கு கேட்காமல்,ஒரு பொது நிலைப்பாட்டுக்காக வாக்கு கேட்பதற்கு ஒருவரை பொதுவாக நிறுத்தியிருப்பது என்பது.

அரியநேத்திரன் தமிழரசுக் கட்சிப் பாரம்பரியத்தில் வந்தவர். ஆனால் அவருடைய கட்சி பொது வேட்பாளர் தொடர்பாக இன்றுவரை முடிவு எடுக்கவில்லை. கடைசியாக அந்த கட்சியின் மத்திய குழு கடந்த வார இறுதியில் கூடியபொழுதும் முடிவு எடுக்கப்படவில்லை. கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் அது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் பொழுது, தமிழ் அரசியலுக்கு தலைமை தாங்கும் கட்சி தங்களுடையது என்ற பொருள்பட பேசியிருக்கிறார். உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம்.

ஆனால் ஒரு மக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதாகக் கருதும் ஒரு கட்சி, அதிலும் குறிப்பாக இனஅழிப்புக்கு நீதி கோரும் ஒரு மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதாகக் கருதும் ஒரு கட்சியானது, எவ்வாறு தலைமை தாங்க வேண்டும்? அது எதிர்த் தரப்பின் அல்லது வெளித் தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு பதில் வினையாற்றும் அரசியலை முன்னெடுக்க வேண்டுமா? அல்லது செயல் முனைப்போடு நீதியைக் கோரும் போராட்டமாக அந்த அரசியலை வடிவமைக்க வேண்டுமா?

கட்சியின் மூத்த தலைவர் சிவஞானம் கூறுகிறார், மக்கள் முடிவெடுப்பார்கள் என்று. தலைமை தாங்குவது என்பது மக்களை முடிவெடுக்க விட்டு விட்டு மக்களின் முடிவைக் கட்சி பின்பற்றுவது அல்ல. கட்சி முடிவெடுத்து மக்களுக்கு வழிநடத்த வேண்டும். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முடிவுகளை எடுத்து மக்களுக்கு வழி நடத்துவதற்குப் பெயர் தான் தலைமைத்துவம். ஆனால் தென்னிலங்கை வேட்பாளர்கள் எதைத் தருவார்கள் என்று அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் வரும்வரையும் காத்திருப்பது என்பது ஒரு போராடும் இனத்துக்கு அழகில்லை மிடுக்கில்லை. அதற்கு பெயர் தலைமைத்துவமும் இல்லை.

பொது வேட்பாளர் விடையத்தில் தமிழரசுக்ககட்சி இரண்டாக நிற்கிறது என்பதே உண்மை நிலை.ஒருமித்த முடிவு எடுக்க முடியாமலிருப்பதற்கு அதுதான் காரணம். அதாவது தலைமைத்துவம் பலமாக இல்லை என்று பொருள். தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருப்பது தலைமைத்துவப் பலவீனம் தான்.

கிடைக்கும் தகவல்களின்படி எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் 13ஆவது திருத்தத்திற்கு மேல் எந்த ஒரு தீர்வையும் தரப்போவதில்லை. தமிழரசுக் கட்சி முன் வைக்கும் சமஸ்டித் தீர்வுக்கு எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் தயாராக இல்லை. ஆயின், யாருடைய தேர்தல் அறிக்கைக்காக தமிழரசுக் கட்சி காத்திருக்கின்றது? அவர்கள் சமஸ்ரியைத் தர மாட்டார்கள் என்று தெளிவாகத் தெரிந்த பின்னரும் அவர்களுக்காக காத்திருப்பது எதைக் காட்டுகின்றது? சமஷ்டி அல்லாத வேறு ஏதோ ஒன்றுக்கு இறங்கிப் போகப் போகிறோம் என்பதையா?

அவர்கள் யாருமே சமஸ்ரித் தீர்வுக்கு உடன்படத் தயாரில்லை என்றால், அதன் பின் கட்சி என்ன முடிவு எடுக்கும்? தேர்தலைப் பரிஷ்கரிக்குமா? அல்லது பொது வேட்பாளரை ஆதரிக்குமா? பகிஸ்கரிப்பது தவறு என்று ஏற்கனவே சுமந்திரன் கூறியிருக்கிறார். அப்படியென்றால் பொது வேட்பாளரை ஆதரிப்பதைத் தவிர வேறு தெரிவு இல்லை. அல்லது அவர்கள் தரக் கூடியவற்றுள் பெறவற்றை எப்படிப் பெறலாம் என்று காத்திருக்கிறார்களா? அதற்குச் சிறீதரன் அணி தயாரா?

கட்சியின் மத்திய குழு கூடுவதற்கு முதல் நாள் சனிக்கிழமை கிளிநொச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது அங்குள்ள விவசாய அமைப்புகள் அப்பொதுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தின. அதில் தமிழ்மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இறுதியில் பேசினார். அவருடைய உரை மிகத் தெளிவாக இருந்தது.

அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளரை நியாயப்படுத்திப் பேசினார். கடந்த மாதம் 22 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தனியார் விருந்தினர் விடுதி


**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**




யில் மாவை சேனாதிராஜாவை சந்தித்தது பற்றியும், மாவையிடம் கையளித்த ஆவணம் ஒன்றைப் பற்றியும் அதிலவர் குறிப்பிட்டார்.

அந்த ஆவணத்தில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதைப் பற்றிய அம்சங்கள் காணப்பட்டதாகவும் அவர் கூறினார்.போலீஸ் அதிகாரத்தை இப்போதைகுத்த் தர முடியாது என்றும், அடுத்த நாடாளுமன்ற தேர்தலின் பின் நாடாளுமன்றத்தில் அதை தீர்மானிக்கலாம் என்றும் ரணில் கூறியுள்ளார்.அதை பதிமூன்று மைனஸ் என்று சிறீதரன் வர்ணிதார்.ஆயின், தமிழரசுக் கட்சி 13 மைனசை ஒரு பேசுபொருளாக ஏற்றுக் கொள்ளத் தயாரா? இல்லையென்றால், யாரிடமிருந்து சமஸ்ரி வரும் என்று சமஷ்ரிக் கட்சி காத்திருக்கின்றது? சமஸ்ரியை யாராவது ஒரு சிங்களத் தலைவர் தங்கத்தட்டில் வைத்துத் தருவார் என்று இப்பொழுதும் சமஷ்ரிக் கட்சி நம்புகின்றதா? போராடாமல் சமஸ்டி கிடைக்கும் என்று சமஸ்ரிக் கட்சி நம்புகின்றதா? தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவே அவ்வாறான ஒரு போராட்டந் தான் என்பதனை சமஸ்ரிக்கட்சி ஏற்றுக் கொள்கிறதா?

அக்கட்சி முடிவெடுக்காமல் தடுமாறுவதும் ஒரு விதத்தில் பொது வேட்பாளர் அணிக்குச் சாதகமானது. உள்ளதில் பெரிய கட்சி முடிவெடுக்காமல் இரண்டாக நிற்பது பொது வேட்பாளருக்கு நல்லது. ஏனென்றால் தமிழரசுக் கட்சியின் வாக்காளர்களும் உட்பட தமிழ் மக்கள் தங்களுக்குத் தெளிவான இலக்குகளை முன்வைத்து தங்களை வழி நடத்த தயாரானவர்களின் பின் திரள்வார்கள். ஏற்கனவே ஈரோஸ் இயக்கத்தின் சுயேச்சைக் குழு பெற்ற வெற்றி ஒரு மகத்தான முன்னுதாரணமாகும்.

அது இலங்கைத்தீவின் தேர்தல் வரலாற்றில் தமிழரசியலில் ஒரு நூதனமான வெற்றி.அந்தத் தேர்தலில் அமிர்தலிங்கம், சம்பந்தர்,யோகேஸ்வரன், ஆனந்தசங்கரி உட்பட பல மூத்த தலைவர்கள் தோல்வியடைந்தார்கள். அதை விட முக்கியமாக திருகோணமலையில் இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. அன்றைக்கு அந்த சுயேட்சைக் குழுவுக்குக் கிடைத்த வெற்றி தமிழ்க் கூட்டுணர்வுக்குக் கிடைத்த வெற்றி.

இன்றைக்கும் தமிழ்க் கூட்டுணர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் அரியநேத்திரனுக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளிக் கொடுப்பார்களாக இருந்தால் அது தமிழ்த் தேசிய அரசியலின் போக்கை மட்டுமல்ல, இலங்கை தீவின் ஒட்டு மொத்த அரசியல் போக்கையும் தீர்மானிக்கும் வாக்களிப்பாக அது அமையும்.

# ஆட்சிக் கவிழ்ப்புகளின் பின்னணி



கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடக்கவுள்ள சூழலில், பங்களாதேஷில் இடம்பெற்ற ஆட்சி கவிழ்ப்பிற்கு அமெரிக்காவே காரணம் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருப்பது, இந்த தேர்தலில் வெளிநாட்டு தலையீடுகள் குறித்த பதற்றத்தை அதிகரிக்கச் செய்தி.ருக்கிறது. பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் அரசாங்கத்துக்கு எதிராக தொடங்கிய மாணவர்களின் போராட்டம், திடீரென வன்முறையாக மாறி ஷேக் ஹசீனா பதவியில் இருந்து விலகுகின்ற நிலையை உருவாக்கியது.

இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் எவ்வாறு இடம் பெற்றனவோ, அதன் போது எவ்வாறான நிகழ்வுகள் இடம் பெற்றனவோ, அதே மாதிரியான நிகழ்வுகள் டாக்காவிலும் இடம் பெற்றிருந்தன. இந்த அபூர்வமான ஒற்றுமை பல்வேறு கேள்விகளை எழுப்பி இருந்தன. இந்தச் சூழலில் தான் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்திருக்கின்ற பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, தம்மை ஆட்சியில் இருந்து அகற்றும் சதித் திட்டத்தின் பின்னணியில் அமெரிக்காவே இருந்தது என்ற குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார். நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுக்க முன் வந்திருந்தால் தான் பதவியில் நீடித்திருக்க முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார். சென். மார்ட்டின் தீவின் மீதான உரிமையை அமெரிக்காவுக்கு கொடுத்திருந்தால், தன்னை ஆட்சியில் இருந்து அகற்ற சதித் திட்டம் தீட்டப்பட்டிருக்காது என்பது அவரது கருத்து.

வங்காள விரிகுடாவில் அமைந்திருக்கின்ற, வெறும் ஒன்பது கிலோ மீட்டர் நீளம், அரை கிலோ மீட்டர் அகலம், 3 சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்ட சின்னஞ்சிறிய சென். மார்ட்டின் தீவு ஒரு நாட்டின் ஆட்சி அதிகா ரத்தின் தலைவிதியையே மாற்றியிருக்கிறது. பங்களாதேஷ் நிலப் பரப்பிலிருந்து ஒன்பது கிலோமீட்டர் தொலைவிலும், மியான்மார் நிலப் பரப்பிலிருந்து இருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்திருக்கின்ற இந்தத் தீவு தான் பங்களாதேஷின் எல்லை முடிவடையும் இடம். கிட்டத்தட்ட ,ந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருக்கின்ற கச்சதீவு போன்ற சர்ச்சைகளையும் இது கொண்டிருக்கிறது.

சுமார் 8000 பேர் மட்டுமே வசிக்கின்ற இந்த தீவில் பெரும்பாலானவர்கள் மீனவர்கள். பங்களாதேஷ் மீனவர்களின் மீது மியான்மார் கடற்படை அடிக்கடி துப்பாக்கிச் சூடு நடத்துவதும், படுகொலைகள் இடம் பெறுவதும் வழக்கமானதாகவே இருக்கிறது.-

பங்களாதேஷில் உள்ள ஒரே ஒரு முருகைக் கற்பாறைகளை கொண்ட கடற்கரையும் இதுதான். இங்கு சுனாமி எட்டிக் கூடப் பார்க்கவில்லை ஆனால் வங்காள விரிகுடாவில் தோன்றுகின்ற புயல்கள் அடிக்கடி இந்த தீவை துவம்சம் பண்ணும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்த தீவு அமைந்திருப்பது தான், பங்களாதேஷின் தலைவலியாக மாறி இருக்கிறது. இந்தத்தீவில் இருந்து வங்காள விரிகுடா முழுவதையும் கண்காணிக்க முடியும். மலாக்கா நீரிணையையும் கண்காணிப்பிற்கு உட்படுத்த முடியும். அதனால் தான் இந்த தீவின் மீதான ஆதிக்கத்திற்காக வல்லரசு நாடுகள் போட்டி போடுகின்றன.

இந்தத் தீவை இராணுவத்தளம் அமைப்பதற்கு தருமாறு. ஷேக் ஹசீனாவிடம் அமெரிக்கா கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு அவர் மறுத்த நிலையிலேயே ஆட்சிக்க விழ்ப்பு இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஷேக் ஹசீனாவின் இந்த குற்றச்சாட்டை அமெரிக்கா மறுத்திருக்கிறது. வெள்ளை மாளிகை பேச்சாளரும் இதனை நிராகரித்திருக்கிறார் இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளரும் மறுத்திருக்கிறார்.



ஆனாலும், இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் தலையீடுகளை கண்காணிப்பதற்கு மிகவும் வசதியான அந்த இடத்தை கைப்பற்றுவதற்கு அமெரிக்கா முற்பட்டிருக்காது என்று கூறினால் அதை யாரும் நம்பத் தயாராக இல்லை. பங்களாதேஷிற்கு முன்னர் சீனா பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது. இரண்டு மிங் வகையை சேர்ந்த தாக்குதல் நீர்மூழ்கிகளையும் கொடுத்திருக்கிறது. அதேவேளை, மியான்மாரில் இராணுவத்தளம், துறைமுகம் போன்றவற்றை அமைப்பதற்கு சீனாவுக்கு இடம் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான சூழலில், இந்த பிராந்தியத்தில் அமெரிக்கா கண்காணிப்பை வலுப்படுத்த விரும்புகிறது. அதனால் பங்களாதேுக்கு சொந்தமான இந்தத்தீவின் மீது அமெரிக்காவுக்கு ஒரு கண் இருக்கிறது.அதனை விட்டுக் கொடுக்க ஹசீனாவின் ஷேக் அரசாங்கம் மறுத்ததால், அவரை பதவியிலிருந்து அகற்றும் சூழ்ச்சி இடம் பெற்றதாக கூறப்படுகிறது.

இந்த சூழ்ச்சியின் பிரதான நபராக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலர் டொனால்ட் லூ விளங்குவதாகவும் குற்றச் சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

அவர் கிர்கிஸ்தானில் இருந்த போதும் அரசாங்கத்தை கவிழ்ப்பதில் தலையீடுகளைச் செய்தார் என்றும், தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி இராஜாங்கச் செயலராகப் பதவிக்கு வந்த பின்னர், பாகிஸ்தானில் இம்ரான் கான் அரசாங்கத்தை கவிழ்ப்பதிலும், இலங்கையில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்ப்பதிலும், தற்போது பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் அரசாங்கத்தை கவிழ்ப்பதிலும் ஈடுபட்டார் என்றும் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் இடம் பெற்ற ஆட்சி மாற்றத்தின் பிரதான சூத்திரதாரி என கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் ஜீலி என விமல் வீரவன்ச அண்மையிலும் குற்றச் சாட்டுகளை முன் வைத்திருந்தார். அரசியலமைப்புக்கு முரணாக தம்மை ஜனாதிபதியாக பதவியேற்கும்படி அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் அழுத்தம் கொடுத்தார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவும் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

பங்களாதேஷில் அண்மையில் நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்பானது, ஷேக் ஹசீனா கூறுவது போல, சென். மார்ட்டின் தீவுக்காக நடந்திருந்தால், இலங்கையிலும் அவ்வாறான ஒரு நிகழ்வு இடம்பெறாது என்று உறுதியாக கூற முடியாது. கொழும்பு துறைமுக நகரத்தை அமைக்கும் பணி சீனாவுக்கு வழங்கப்பட்டதன் பின்னர் 2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ பதவியிழக்கும் நிலை ஏற்பட்டது. 2015 ஆம் ஆண்டின் தேர்தலில் தம்மைத் தோற்கடிக்க அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் புலனாய்வு பிரிவுகள் தீவிரமாக பணியாற்றியதாக, மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியிருந்தார். அது போலவே, கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், சீனாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்தியதும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு, சரியான இடத்தை வழங்க மறுத்ததும், அவரது அரசாங்கம் கவிழ்க்கப்படும் நிலை ஏற்பட்டதற்கு காரணமாக சொல்லப்படுகிறது. அவரும் வெளிநாட்டு தலையீடுகள் பற்றிய குற்றச் சாட்டுகளை முன் வைத்திருந்தார். ஆனால் தன்னை யார் பதவியில் ,ருந்து அகற்றியது என் பதை அவர் வெளிப்படையாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஏனென்றால் அவருக்கு அமெரிக்காவில் நலன்கள் இருக்கின்றன.

அவரது மகன் அமெரிக்காவிலேயே நிரந்தரமாக வசிக்கிறார். கோட்டாபய ராஜபக்ஷவின் மனைவி அயோமா, அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை கொண்டவர். அவர்களுடன் இணைந்து கொள்வதற்கு கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து முயற்சித்து வருகிறார். ஆனால் அவருக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்து வருகிறது. எப்போதாவது ஒரு நாள் அமெரிக்காவுக்கு செல்ல வேண்டும் என்பதற்காக அவரால் அமெரிக்காவின் மீது குற்றச்சாட்டை நேரடியாக முன்வைக்க முடியவில்லை.

அதேவேளை, தெற்காசியப் பிராந்தியத்தில் அடுத்தடுத்து மூன்று நாடுகளில் ஆட்சி கவிழ்ப்புகள் அல்லது பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கின்றன. இது பிராந்தியத்தில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தும் முயற்சிகளின் ஒரு அங்கமாகவும் இருக்கலாம்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளில் இடம் பெற்ற ஆட்சிக் கவிழ்ப்புகளில் அமெரிக்காவை தொடர்புபடுத்தும் சில நிபுணர்கள். இந்தியாவிலும் அவ்வாறான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அமெரிக்காவும் இந்தியாவும் நெருங்கிய ஒத்துழைப்புகளையும் உறவுகளையும் கொண்டுள்ள போதும், சில விடயங்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் போட்டி, பூசல்கள், முரண்பாடுகள் உள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை.

இப்படிப்பட்ட நிலையில் இலங்கையில் நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யார் ஆட்சிக்கு வருவதை அமெரிக்கா விரும்புகிறது, அல்லது யாரை ஆட்சிக்கு (22ம் பக்கம் பார்க்க)




# பொதுக் கட்டமைப்பும் மூன்று கட்சிகளும்

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகள் ஜனாதிபதியையும் எதிர்க்கட்சி தலைவரையும் சந்தித்திருக்கின்றன. ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியப் பொதுக் கூட்டமைப்புச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக அழைப்பு விடுத்தார்கள். கட்டமைப்பாக அழைக்கவில்லை. ஆனாலும் கட்டமைப்பில் உள்ள பெரும்பாலானவர்களை அழைத்தார்கள். ஆனால் பொதுக் கட்டமைப்பாக அழைக்கிறோம் என்று அழைப்பில் குறிப்பிடப்படவில்லை. எதற்காக அழைக்கிறோம் என்றும் இரு தரப்புமே கூறவில்லை.

இதில் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் ஏழு பேர்களும் மேற்படி இரண்டு சந்திப்புகளுக்கும் செல்லவில்லை. தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள் செல்லவில்லை. ஆனால் மூன்று கட்சிகள் சென்றன.

அவை தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பிரதிநிதிகளாக அங்கே செல்லவில்லை. ஆனாலும் அவர்கள் அவ்வாறு தான் சென்றார்கள் என்று வெளியில் நம்பப்படுகின்றது. ஏனென்றால் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் பொதுக் கட்டமைப்பை ஒரு கட்டமைப்பாக அணுகவில்லை என்றாலும் கூட, அது பொதுக் கட்டமைப்பு என்பதற்காகத் தான் அந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

இதை இன்னும் ஆழமான பொருளில் சொன்னால் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தும் பொதுக் கட்டமைப்பை அவர்கள் அழைத்தார்கள். தமிழ் பொது வேட்பாளர் அவர்களுக்கு பதட்டத்தை ஏற்படுத்தியதே அதற்குக் காரணம். எனவே அந்த இரண்டு அழைப்புகளும் வெளிப்படையாக பொதுக் கட்டமைப்புக்கு என்று கூறப்படா விட்டாலும், பொதுக் கட்டமைப்பை நோக்கியவை தான்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், அந்த மூன்று கட்சிகளும் அந்த இரண்டு சந்திப்புகளுக்கும் போயிருக்கக் கூடாது. ஆனால் அதற்கு அவர்கள் கூறும் விளக்கம் என்ன?

நாட்டில் உள்ள கட்சிகள் என்ற அடிப்படையில், நாட்டின் தலைவர் ஓர் அழைப்பை விடுக்கும் பொழுது சென்று சந்திப்பது தான் அரசியல் நாகரீகம் என்று கூறப்படுகிறது. தவிர, நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அழைக்கும் பொழுது அவர்கள் சென்று சந்திப்பது இயல்பானது. இம்மூன்று கட்சிகளில் இரண்டு கட்சிகளிடம் மொத்தம் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. எனவே அந்த அடிப்படையில் மேற்படி சந்திப்புகள் இடம் பெற்றதாக ஒரு விளக்கம் தரப்படுகின்றது.

பொதுக் கட்டமைப்பின் ஊடக அறிக்கை ஒரு பொதுக் கட்டமைப்பாக அந்த சந்திப்பில் தாங்கள் பங்குபற்றப் போவதில்லை என்று தெளிவாகக் கூறி விட்டது.

மூன்று கட்சிகளும் பொதுக் கட்டமைப்பின் சார்பாகத் தங்கள் பங்குபற்றியதாகத் தெரிவிக்கவில்லை. ஆனால் பொதுக் கட்டமைப்பை விமர்சிப்பவர்கள் பொது வேட்பாளர் விமர்சிப்பவர்கள் அவ்வாறு தான் வியாக்கியானம் செய்கின்றார்கள். பொதுக் கட்டமைப்பு உடைந்து விட்டது, பொதுக் கட்டமைப்புக்குள் ஐக்கியம் இல்லை, அந்த மூன்று கட்சிகள் கூட்டுப் பொறுப்பின்றி நடந்து கொண்டு விட்டன.பொதுக் கட்டமைப்பில் உள்ள மக்கள் அமைப்புக்கும் கட்சிகளுக்கும் இடையில் உருகிப் பிணைந்த கூட்டு உருவாகவில்லை... என்றெல்லாம். விமர்சனங்கள் வருகின்றன

முதலில் ஒன்றை தெளிவுபடுத்த வேண்டும். கட்சிகளும் மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய கட்டமைப்பு தமிழ்த் தேசிய வரலாற்றில் ஒரு புதிய தோற்றப்பாடு. அவ்வாறு ஒரு கட்டமைப்பை உருவாக்கும் பொழுது அதற்கென்று ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை எழுதிக் கொண்டமையும் ஒரு புதிய தோற்றப்பாடு தான். கடந்த 15 ஆண்டுகளாக பலரும் எதிர்பார்த்த எழுதி வந்த ஒன்று. அது இப்பொழுது ஏறக்குறைய ஒரு மாதக் குழந்தை தான். அதில் பலவீனங்கள் உண்டு. அங்கே தவறுகள் நடக்கும்.அங்கே முழுமையான கூட்டுப் பொறுப்பை, உருகிப்



பிணைந்த இணைப்பை எதிர்பார்க்க முடியாது. அதைப் படிப்படியாகத் தான் ஏற்படுத்தலாம். இவ்வாறு கட்சிகளையும் மக்கள் அமைப்பையும் இணைத்து ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

ஏனென்றால் தமிழர் அரசியலில் எல்லாமே சிதறிப் போய் இருக்கின்றன என்பதனால்தான். தமிழரசியலின் சீரழிவு காரணமாகத்தான் அவ்வாறு ஒரு கட்டமைப்பு தேவைப்பட்டது. தமிழரசியல் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக சீரழிந்து வருகிறது.

தமிழ்க் கட்சிகளை ஐக்கியப்படுத்துவதற்காக குடிமக்கள் சமூகங்கள் இன்று நேற்று உழைக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளாக உழைத்து வருகின்றன. மறைந்த முன்னாள் மன்னார் ஆயரின் தலைமையில் தமிழ் சிவில் சமூக அமையத்தில் இருந்து தொடங்கி இப்பொழுதுள்ள பொது மக்கள் சபை வரையிலும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் இந்தக் கட்சிகளை ஒன்றிணைப்பதற்காக விடாமல் முயற்சித்து வருகிறார்கள். அதில் தற்காலிக வெற்றிகளை அவர்களால் பெற முடிந்திருக்கிறதே தவிர நிரந்தர வெற்றிகளைப் பெற முடியவில்லை.

இவ்வாறான ஒரு துர்பாக்கியமான அரசியல், சிவில் சமூகப் பின்னணியில், இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு மாதக் குழந்தையாகிய தமிழ்த் தேசியப் பொது கட்டமைப்பும் ஒரு தற்காலிக வெற்றியாக மாறி விடக் கூடாது என்ற கரிசனை குடிமக்கள் சமூகங்களுக்கு மட்டுமல்ல எல்லாத் தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும்.

ஏனென்றால் ஒற்றுமையைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு தெரிவு கிடையாது. ஒற்றுமை சிதைந்தால் அதை விட்டு விட்டு வேறு ஒன்றை யோசிக்கலாம் என்று கூறுவதற்கு வேறு தெரிவே கிடையாது. தமிழ் மக்கள் ஒன்றுசேரத் தவறினால் தமிழ்க் கட்சிகளை ஒரு மையத்தில் ஒன்றிணைக்கத் தவறினால்.அது அடுத்தடுத்த தேர்தல்களில் எதிரொலிக்கும் என்பதை விடவும் ஆபத்தான விடயம் என்னவென்றால், தமிழ் மக்கள் ஒரு தூர்ந்து போகும் சமூகமாக மாறி விடுவார்கள் என்பது தான்.

எனவே தமிழ்ச் சமூகம் தூர்ந்து போய் ஒரு தேசமாக இல்லாமல் சிதறிப் போவதற்கு அனுமதிக்க முடியாது. அந்த அடிப்படையில் சிந்தித்தால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லா அரசியல் சக்திகளையும் தரப்புகளையும் ஐக்கியப்படுத்துவது தான் ஒரே வழி. ஐக்கியம் இல்லையென்றால் தமிழ்த் தேசியமே இல்லை என்ற ஒரு விளிம்பில் இப்பொழுது தமிழ் அரசியல் வந்து நிற்கின்றது. அந்த அடிப்படையில் தான் ஒரு பொதுக் கட்டமைப்பு யோசிக்கப்பட்டது.

தேசம் என்பது ஒரு பெரிய மக்கள் திரள். தேசியவாத அரசியல் எனப்படுவது மக்களை ஆகக்கூடிய பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. அவ்வாறு மக்களை ஒரு பெரிய திரட்சியாகக் கூட்டிக் கட்டுவது என்று சொன்னால் அந்த மக்கள் மத்தியில் வேலை செய்யும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் கட்சிகளையும் கூட்டிக்கட்ட வேண்டும். அவ்வாறு கூட்டிக் கட்டத் தவறினால் தமிழ்ச் சமூகம் இப்பொழுது இருப்பதை விடவும் கேவலமான பாரதூரமான விதத்தில் தூர்ந்து போய்விடும். அவ்வாறு தூர்ந்து போகக் கூடாது என்பதற்காகத் தான் பொதுக் கட்டமைப்பு. எனவே பொதுக் கட்டமைப்பு உடைய வேண்டும் என்று உழைப்பவர்கள் வெற்றி பெற்று விடக் கூடாது. தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதை விரும்பாத சக்திகள் பொதுக் கட்டமைப்பு உடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள் விரும்புகிறார்கள் அதற்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கும் விதத்தில் ஒரு மாதக் குழந்தையான பொதுக் கட்டமைப்பை மேலும் பலவீனப்படுத்த வேண்டுமா? அல்லது தமிழ் குடிமக்கள் சமூகங்கள் மேலும் தீவிரமாக, தீர்க்கதரிசனமாக அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டியிருப்பதை அது காட்டுகின்றதா?


கட்டுரையாளர்:-
திருகோணமலை இருந்து
- யசீந்திரா -




ஏனென்றால் இந்த இடத்தில் மனம் தளர்ந்தால்.இந்த இடத்தில் சோர்வடைந்தால் பிறகு தமிழ் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப எத்தனை ஆண்டுகள் செல்லும்? ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை தோல்வியுற்ற பின் எட்டு ஆண்டுகள் சென்றன இப்படியொரு கட்டமைப்பை உருவாக்க ஆரம்ப காலத்தில் ஏற்பட்டிருக்கும் சிறிய சறுக்கல்கள், தளம்பல்கள் போன்றவற்றை பொருட்படுத்தி பலவீனமான ஒரு ஐக்கியத்தை உடைப்பதா? அல்லது அதனை மேலும் பலப்படுத்தி உடைக்கப்பட முடியாத ஒன்றாக உருகிப் பிணைந்த ஒன்றாக வளர்த்தெடுப்பதா?

என்ற கேள்விக்கு விடை முக்கியம். தத்துவ ஞானி ஹெகல் கூறுவார் வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொண்டது எதையென்றால் நாம் வரலாற்றிலிருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தான். இது தமிழ் அரசியலுக்கு குறிப்பாக பொதுக் கட்டமைப்புக்கும் பொருந்தும். அரசற்ற சிறிய ஒரு மக்கள் கூட்டம் எதிர்த் தரப்பு விரும்புவதை செய்ய வேண்டுமா அல்லது செய்யக் கூடாதா?


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இஸ்ரேல் - ஈரான் நாடுகளின் இராணுவ பலம் குறித்த ஒப்பீடு

## இரான் மற்றும் இஸ்ரேல் - ஓர் ஒப்பீடு

| | இஸ்ரேல் | இரான் |
|---|---|---|
| மக்கள் தொகை | 96 லட்சம் | 8.86 கோடி |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (அமெரிக்க டாலர்களில்) | 525 பில்லியன் | 413 பில்லியன் |
| தனிநபர் ஜிடிபி (அமெரிக்க டாலர்களில்) | 54,931 | 4,669 |
| பாதுகாப்பு துறை பட்ஜெட் (அமெரிக்க டாலர்களில்) | 19 பில்லியன் | 7.4 பில்லியன் |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்பு துறையின் விகிதம் | 4% | 2% |

*2022க்கான தரவுகள். சில விவரங்கள் பொதுவெளியில் கிடைக்கும் தரவுகளில் இருந்து மதிப்பிடப்பட்டுள்ளன.

இஸ்ரேல் – இரான் இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், மத்திய கிழக்குக் பகுதி கொந்தளிப்பாகவே உள்ளது. மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பெரிய மோதல் பற்றிய அச்சம் எழுந்துள்ளது. இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் இரான், இரண்டு நாடுகளில், எந்த நாட்டின் ராணுவம் பலம் மிக்கது என்ற கேள்வி எழுகிறது.

### இஸ்ரேல் - ஈரான் யார் கை ஓங்கியுள்ளது?

பிபிசி இந்த கேள்வியைக் கீழே பட்டியலிடப்பட்டுள்ள ஆதாரங்களைப் பயன்படுத்தி எடை போட்டது. இரு நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க திறன்கள் உள்ளன, அவை ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மூலோபாய ஆய்வுகள் நிறுவனம் (International Institute for Strategic Studies - IISS) இரு நாட்டு இராணுவத்தின் தாக்கும் திறனை ஒப்பிட்டு, பல்வேறு அதிகாரப்பூர்வ மற்றும் இணையத்தில் கிடைக்கும் முறைகளைப் பயன்படுத்தி சிறந்த மதிப்பீடுகளை உருவாக்குகிறது.

ஸ்டாக்ஹோம் இன்டர்நேஷனல் பீஸ் ரிசர்ச் இன்ஸ்டிடியுட் போன்ற பிற நிறுவனங்களும் இத்தகைய மதிப்பீடுகளைச் செய்கின்றன. ஆனால், பெரும்பாலும் புள்ளிவிவரங்களை வழங்காத இந்த நாடுகள் குறித்த ஆய்வில் துல்லியம் மாறுபடும்.

இருப்பினும், ஓஸ்லோ அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தைச் (Peace Research Institute Oslo - PRIO) சேர்ந்த நிக்கோலஸ் மார்ஷ், உலகெங்கிலும் உள்ள நாடுகளின் இராணுவ வலிமையை மதிப்பிடுவதற்கான அளவுகோலாக ஐ.ஐ.எஸ்.எஸ் கருதப்படுகிறது, என்கிறார்.

இஸ்ரேல், தனது பாதுகாப்பு வரவு செலவுத் திட்டத்தில் இரானை காட்டிலும் அதிகமாகச் செலவழிக்கிறது என்று ஐ.ஐ.எஸ்.எஸ் கூறுகிறது. கடந்த 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் இரானின் பாதுகாப்பு பட்ஜெட் சுமார் 740 கோடி அமெரிக்க டாலர்களாக இருந்தது (இந்திய மதிப்பில் சுமார் 62,000 கோடி ரூபாய்).

இஸ்ரேலின் பாதுகாப்பு பட்ஜெட் அதைவிட இருமடங்காக இருந்தது. அதாவது 1,900 கோடி அமெரிக்க டாலர்களாக இருந்தது. (இந்திய மதிப்பில் சுமார் 1.6 லட்சம் கோடி ரூபாய்). இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும் போது இரானை விட இரட்டிப்பாகும்.

### தொழில்நுட்ப ரீதியில் முந்துவது யார்?

ஐ.ஐ.எஸ்.எஸ் (IISS) புள்ளிவிவரங்கள், இஸ்ரேலிடம் 340 ராணுவ விமானங்கள் போருக்குத் தயாராக இருப்பதாகக் காட்டுகின்றன. ஜெட் விமானங்களில் நீண்டதூர வேலைநிறுத்த வரம்பைக் கொண்ட F-15 விமானங்கள், ரேடாரை தவிர்க்கக் கூடிய உயர் தொழில்நுட்ப F-35 'ஸ்டெல்த்' விமானங்கள், மற்றும் வேகமான தாக்குதல் ஹெலிகாப்டர்கள் ஆகியவை இதில் அடங்கும்.

இரானிடம் சுமார் 320 போர்த் திறன் கொண்ட விமானங்கள் இருப்பதாக ஐ.ஐ.எஸ்.எஸ் மதிப்பிட்டுள்ளது. இந்த ஜெட் விமானங்கள் 1960களில் இருந்தே இருப்பவை. இதில் F4, F5 மற்றும் F14 ஆகியவை அடங்கும். (F14 விமானம், 1986 திரைப்படமான 'டாப் கன்' மூலம் பிரபலமானது).

ஆனால் PRIO அமைப்பின் நிக்கோலஸ் மார்ஷ் கூறுகையில், இந்தப் பழைய விமானங்களில் உண்மையில் எத்தனை பறக்க முடியும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஏனெனில் பழுதுபார்க்கும் பாகங்களைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கும், என்கிறார்.

### அயர்ன் டோம் மற்றும் ஏரோ அமைப்புகள்

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்பின் முதுகெலும்பாக, அதன் 'அயர்ன் டோம்' மற்றும் 'ஏரோ' அமைப்புகள் இருக்கின்றன. ஏவுகணைப் பொறியாளர் உசி ரூபின், இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சகத்தில், இஸ்ரேல் ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பின் நிறுவனர் ஆவார்.

இப்போது ஜெருசலேம் இன்ஸ்டிடியுட் ஃபார் ஸ்ட்ராடஜி அண்ட் செக்யுரிட்டியின் மூத்த ஆராய்ச்சியாளரான அவர், கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேல் மீது இரான் ஏவிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் அனைத்தையும் 'அயர்ன் டோம்' மற்றும் இஸ்ரேலின் சர்வதேச கூட்டாளிகள் அழித்ததைக் கண்ட போது தாம் எவ்வளவு 'பாதுகாப்பாக' உணர்ந்ததாக பிபிசியிடம் கூறினார்.

'நான் மிகவும் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்ந்தேன். இலக்குகளுக்கு எதிராக இது மிகவும் சிறப்பு வாய்ந்தது. இதுவொரு குறுகிய தூர ஏவுகணைப் பாதுகாப்பு. வேறு எந்த அமைப்பிலும் இது போன்ற எதுவும் இல்லை,' என்றார்.

### இஸ்ரேல் - ஈரான் எவ்வளவு தூரம்?

இஸ்ரேல், இரானில் இருந்து 2,100 கி.மீ., தொலைவில் உள்ளது. ஏவுகணைகள் தான் இரானை தாக்குவதற்கான இஸ்ரேலின் முக்கிய வழி, என 'டிஃபென்ஸ் ஐ' இதழின் ஆசிரியர் டிம் ரிப்லி பிபிசியிடம் கூறினார். இரானின் ஏவுகணைத் திட்டம் மத்தியக் கிழக்கில் மிகப் பெரியதாகவும் மிகவும் மாறுபட்டதாகவும் கருதப்படுகிறது.

கடந்த 2022ஆம் ஆண்டில், அமெரிக்க மத்திய கட்டளையின் ஜெனரல் கென்னத் மெக்கென்சி, இரானிடம் '3,000க்கும் அதிகமான' பாலிஸ்டிக் ஏவுகணைகள் இருப்பதாகக் கூறினார்.

சி.எஸ்.ஐ.எஸ் (CSIS) ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தின்படி, இஸ்ரேலும் பல நாடுகளுக்கு ஏவுகணைகளை ஏற்றுமதி செய்கிறது. கடந்த 1980 முதல் 1988 வரை அண்டை நாடான இராக் உடன் செய்த போரின் நேரத்தில் இருந்து, இரான் தனது ஏவுகணை அமைப்புகள் மற்றும் ட்ரோன்களில் விரிவான பணிகளை மேற்கொண்டுள்ளது.

இரான் குறுகிய மற்றும் நீண்டதூர ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை உருவாக்கியுள்ளது. அவற்றில் பல, கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேல் மீது ஏவப்பட்டன.

ஹஜீத்தி கிளர்ச்சியாளர்களால் சௌதி அரேபியாவை குறி வைத்துத் தாக்கப்பட்ட ஏவுகணைகளை ஆய்வு செய்த ஆய்வாளர்கள், அவை இரானில் தயாரிக்கப்பட்டவை என முடிவு செய்துள்ளனர்.

### நீண்ட தூரத் தாக்குதல்

டிஃபென்ஸ் ஐ இதழின் டிம் ரிப்லி கூறுகையில், இஸ்ரேல் இரானுடன் தரைப் போரில் ஈடுபடுவது சாத்தியமில்லை என்கிறார். இஸ்ரேலின் பெரிய நன்மை அதன் விமானப் படை, மற்றும் அதன் வழிகாட்டும் ஆயுதங்கள். எனவே இரானில் உள்ள முக்கிய இலக்குகளுக்கு எதிராக வான்வழித் தாக்குதல்களை நடத்தும் திறன் அதனிடம் உள்ளது,' என்றார்.

அதிகாரிகளைக் கொல்லவும், எண்ணெய் நிறுவல்களைக் காற்றில் இருந்து அழிக்கவும் இஸ்ரேலுக்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக ரிப்லி கூறுகிறார்.

இதன் மையத்தில் இருப்பது 'பனிஷ்' தண்டனை. இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசியல் தலைவர்கள் அந்த வார்த்தையை எப்போதும் பயன்படுத்துகிறார்கள். அது அவர்களின் தத்துவத்தின் ஒரு பகுதி, இது அவர்களின் தத்துவத்தின் ஒரு பகுதி,' என்கிறார்.

கடந்த காலத்தில், இரானின் தாக்குதலைத் தூண்டிய சிரியாவின் தலைநகரில் உள்ள இரானிய தூதரகக் கட்டடத்தை கடந்த ஏப்ரல் 1ஆம் தேதி அழித்தது உட்பட, உயர்மட்ட இரானிய இராணுவம் மற்றும் பொது மக்கள் வான்வழித் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

அதற்கோ, அல்லது இரானின் முக்கிய அதிகாரிகளைக் குறி வைத்து நடத்தப்பட்ட பல தாக்குதல்களுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்கவில்லை. ஆனால் மறுக்கவுமில்லை.

### கடற்படையின் பலம் என்ன?

ஐ.ஐ.எஸ்.எஸ் அறிக்கைகளின்படி, இரானின் கடற்படையில் சுமார் 220 கப்பல்கள் உள்ளன. இஸ்ரேலிடம் சுமார் 60 கப்பல்கள் உள்ளன. சைபர் தாக்குதல் நடந்தால், இரான் இழப்பதைவிட இஸ்ரேல் இழப்பது அதிகம்.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்பு இரானின் பாதுகாப்பு அமைப்பை விட தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டது. எனவே இஸ்ரேல் இராணுவத்தின் மீது மின்னணு தாக்குதல் நடத்தப்பட்டால் அதிக அளவில் சாதிக்க முடியும்.

இஸ்ரேலிய அரசாங்கத்தின் தேசிய சைபர் இயக்குநரகம், இணைய தாக்குதல்களின் தீவிரம் முன்பை விடக் குறைந்தது மூன்று மடங்கு அதிகமாக உள்ளது. மேலும், ஒவ்வொரு இஸ்ரேலிய துறையிலும் தாக்குதல்கள் நடக்கக்கூடும். போரின் போது இரான் மற்றும் லெபனானில் இயங்கும் ஹெஸ்பொலா அமைப்பு இடையிலான ஒத்துழைப்பு அதிகரித்தது.

கடந்த 2023ஆம் ஆண்டின் அக்டோபர் 7 தாக்குதல்களுக்கும் அந்த ஆண்டின் இறுதிக்கும் இடையே 3,380 சைபர் தாக்குதல்கள் நடந்ததாக அது தெரிவிக்கிறது. இரானின் குடிமைத் தற்காப்பு அமைப்பின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் கோலம்ரேசா ஜலாலி கூறுகையில், சமீபத்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக இரான் கிட்டத் தட்ட 200 இணையத் தாக்குதல்களை முறியடித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில், இரானின் எண்ணெய் அமைச்சர் ஜாவத் ஒவ்ஜி, ஒரு இணையத் தாக்குதல் நாடு தழுவிய அளவில் பெட்ரோல் நிலையங்களுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகக் கூறினார்.

### அணு ஆயுதஅச்சுறுத்தல்

இஸ்ரேல் அதன் சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுபற்றி அந்நாடு தெளிவாகப் பேசுவதில்லை என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

இரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாகக் கருதப்படவில்லை. குற்றச்சாட்டுகள் (22ம் பக்கம் பார்க்க)

கனடாவில் வசிக்கும் 30 வயது
PHD வரை படித்த
மணமகளுக்கு
பொருத்தமான மணமகனை
எதிர்பார்க்கின்றோம்.
தரகர்களும் தொடர்புக்கொள்ளலாம்.
To Contact :
+1 647 709 1761 | +1 647 709 1536
leo.leofinance@ gmail. Com

# பொதுவேட்பாளர் கண்டு பிடிப்பு:- சிறுவர்களின் குரும்பட்டித் தேர்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



தமிழ்ப்பொது வேட்பாளராக(?) ஒருவரை (பா.அரியநேத்திரனை) க் கண்டு பிடித்ததைப் பெருஞ் சாதனையாக தமிழ்ப்பொது வேட்பாளருக்கான(?) பொதுச்சபையினர் அறிவித்து, ஆரவாரப்படுகின்றனர். அரசியல் பெறுமானத்தில் இது நகைப்புக்குரியதாக (கோமாளிதனமாக) இருந்தாலும் அவர்களைப் பொறுத்த வரையில் இது பெரும் சாதனைதான். சிறுவர்கள், குரும்பட்டியில் தேர் செய்வதைப் போல (அது அந்தச் சிறுவர்களுக்கு படு சீரியஸான விடயமாகவே இருக்கும்) விளையாட்டாகத் தொடங்கப் பட்ட பொதுவேட்பாளர் விடயம், ஒரு மெய்யான தேராகுவதற்குப் பல சிக்கல்களைக் கொண்டதென்று அவர்கள் எண்ணியிருக்கவில்லை. போகப் போகத் தான் அதனுடைய சிக்கல்களும் சிரமங்களும் விளங்கத் தொடங்கின. (ஒரு கட்டத்தில் பொது வேட்பாளர் விடயத்தை ஏன் தொட்டோம் என்று எண்ணக் கூடிய அளவுக்கு, இவர்களுடைய தூக்கத்தையே பறித்தது).

முக்கியமாக ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுகின்றவருக்கு தேர்தல் விதிமுறைகளின்படி இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள் என்ன என்பதைக் கூட இவர்கள் விளங்காமலே இருந்துள்ளனர். இதை அவர்களே சொல்கிறார்கள், தமிழ் மக்கள் பொதுச் சபைக்குள் காணப்படும் கருத்துருவாக்கிகள் ஒரு பொதுவேட்பாளர் தொடர்பாக கட்டியெழுப்பிய கருத்துருவாக்கம் என்னவென்றால், கிழக்கிலிருந்து ஒரு பெண் வேட்பாளர் தான். அவரும் அரசியல் கட்சிகள் சாராதவராக இருந்தால் உத்தமம் என்று கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் அப்படி ஒரு பெண் வேட்பாளரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் நெருக்கடிகள் இருந்தன. மட்டுமல்ல, நாட்களும் குறைவாக இருந்தன. ஒரு பெண் வேட்பாளரைக் கண்டு பிடிக்க முடியாத இடத்தில் ஓர் ஆண் வேட்பாளரை அதாவது கட்சி சாரா ஆண் வேட்பாளரை கண்டு பிடிக்கலாமா என்று சிந்திக்கப்பட்டது. ஆனால் அங்கேயும் வரையறைகள் இருந்தன. அதன் பின்னர் தான் கட்சி சார்ந்தயாராவது இருப்பார்களா என்று தேட வேண்டி வந்தது என.

1.ஒரு சிறிய குழுவினர் கூடித் தம்மைத்தாமே தமிழ் மக்கள் பொதுச் சபையினர் என்று அழைத்துக் கொள்கின்றனர். ஒரு அமைப்புக்குரிய விதிமுறைகள், அடிப்படைகளின்படி இந்த அமைப்பின் உறுப்பினர்கள் எவராலும் தெரிவு செய்யப்படவில்லை. மேலும் தம்மைக் கருத்துருவாக்கிகள்(!) என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இந்தக் கருத்துருவாக்கிகள் 2009க்குப் பின் (புலிகளின் வீழ்ச்சிக்குப் பின், தம்மை அரசியல் அரங்கில் நிலைப்படுத்துவதற்கு தலை கீழாகக் கூட நின்று பார்க்கிறார்கள். இதற்காக தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கியது தொடக்கம் விக்னேஸ்வரனைத் தமிழர் அரசியலின் மகாமேதை, ஈழத்தின் தலாய்லாமா என்றது வரையில் என்னவோ எல்லாம் செய்து பார்த்தனர். இறுதியாக இப்போது வந்திருக்கும் இடமே தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற குரும்பட்டித் தேர்

2 தமிழ்ப்பொது வேட்பாளராக கிழக்கிலிருந்து ஒரு பெண் வேட்பாளரை நிறுத்துவதற்கு தாம் யோசித்ததாகக் கூறப்படுகிறது. நல்ல யோசனைதான். ஆனால், சமூக வெளியில் பெண்களையும் இளையோரையும் அரசியல், சமூக ஆளுமைகளாக வளர்க்காமல், தன்னியல்பாக எங்கேனும் ஓரிருவர் எழுந்து வந்தால் அவர்களைக் கொண்டாடாமல் இருந்து விட்டு இப்படித் திடீரென ஆட் தேடினால் திரவியம் கிடைக்குமா? அதற்கான உழைப்பு (தேடுவதற்கான உழைப்பல்ல. ஆளுமைகளை உருவாக்குவதற்கான உழைப்பு)ச் செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அது தான் தேசமாகச் சிந்திப்பதன் அடிப்படையாகும்.

3.இதே தான் அரசியல் சாராத இன்னொரு ஆளுமையைத் தேடுவதிலும் நிறுத்துவதிலும் வந்த பிரச்சினையாகும். ஆக, தமிழ்ச்சமூகம் (தமிழீழம்) மிகப் பெரிய ஆளுமை வரட்சியில் உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அரசியலில் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் இதுதான் நிலைமை. இதையே நாம் தொடர்ச்சியாகச் சுட்டிக் காட்டி வருகிறோம். ஆனால், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நகைப்புக்குரிய தாக்கி நிராகரித்தவர்கள், இப்போது சூழலைக் கரித்துக் கொட்டுகிறார்கள். மாற்றுச் சிந்தனையோடு புதிதாகச் சிந்திப்போரையும் புத்தாக்கம் காண்போரையும் நிராகரித்து ஒதுக்கி வந்த தன் விளைவையும் இதனுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

4.பொதுவேட்பாளரைக் கண்டு பிடிப்பதற்கு கால அவகாசம் (நாட்களும்) போதாமலிருந்தது' என்று அழுகிறார்கள். 15 ஆண்டுகளாகப் பொது வேட்பாளரைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் கருத்துருவாக்கிகளுக்கு அதற்கான வேட்பாளராக யாரை எப்படியானவரை நிறுத்தலாம் என்று யோசிக்க முடியாமல் போய் விட்டது. என்பதால்தான் எல்லா இடமும் தேடிக் கட்டக் கடைசியாக அரியநேத்திரனைக் கண்டு பிடிக்க முடிந்தது. அல்லது அவருடைய கால்களைப் பிடிக்க வேண்டியிருந்தது. ம்... எல்லாம் ஒரு விதி! இன்னும் இவர்களுடைய கவலைகள் முடியவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் பொறுத்து பொதுக் கட்டமைப்புக்கு சட்டரீதியாக சில வரையறைகள் இருந்தன. தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தலாம். அல்லது ஒரு முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுயேட்சையாகக் களமிறங்கலாம். இந்த இரண்டு சாத்தியக் கூறுகளுக்குள்ளும் தான் ஒரு பொது வேட்பாளரைத் தேட வேண்டியிருந்தது. அதாவது தேர்தல் சட்டங்களின்படி ஒன்றில் பதிவு செய்யப் பட்ட ஒரு கட்சி வேண்டும். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டும் என.

இப்படிச் சிரமப்படக் காரணம், களநிலை அனுபமும் நடைமுறை அறிவும் இல்லாததே. குறைந்த பட்சம் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படும் வேட்பாளருக்கான தகுதி நிலையைப் பற்றிய தேர்தல் சட்டம் என்ன என்று கூடத் தெரியாமலிருந்திருக்கிறது. கற்பனைக் குதிரையில் சவாரி செய்வோரின் நிலை இப்படித்தானிருக்கும்.

இதனால்தான் படாத பாடெல்லாம் பட்டு ஒரு பொதுவேட்பாளரைக் கண்டு பிடிக்கவும் அவரை இணங்க வைக்கவும் வேண்டியிருந்தது. 'எப்படியோ இறுதியில் ஒரு பலிக்கடா கிடைத்து விட்டது — வசமாக மாட்டி விட்டது' என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறார்கள். என்பதால் தான் பொது வேட்பாளர் வந்து விட்டார் என்று புளகாங்கிதமடைகிறார்கள். உண்மையில் இப்போது தான் இவர்கள் நிம்மதிப் பெருமூச்சை விடுகிறார்கள்.

அது கூட இவர்கள் எதிர்பார்த்த இவர்கள் கூறிய பரப்பிற்குள் வேட்பாளர் அமையாமல், எதிர் முகாமான தமிழரசுக் கட்சிக்குள்ளேயே தேட வேண்டியிருந்தது. இதற்கொரு சப்பை நியாயத்தைச் சொல்கிறார்கள். தமிழரசுக் கட்சிக்குள் குழப்பத்தை உண்டாக்கவும் அதை உடைக்கவும் அதற்குள்ளிருக்கும் பொது வேட்பாளருக்கான ஆதரவு எதிர் என்ற இரு நிலைப்பாட்டை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்காகவே தாம் அரியநேந்திரனையும் தவராஜாவையும் இலக்கு வைத்ததாக. (சிரித்து விடாதீர்கள்). இப்படியெல்லாம் கற்பனைக் கதைகள் பல உண்டு. ஆனால், மேற்கூறிய அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான தகுதியும் வாய்ப்புகளுமுள்ளவர்கள் பொதுக் கட்டமைப்பிற்குள் இருந்தனர். தேவையான சின்னங்களும் அதை வழங்கக் கூடிய கட்சிகளும் இருந்தன. ஆனால், அதற்குத் தயாரான மனநிலை கட்சிகளுக்குள் இருக்கவில்லை என்பதே உண்மை. இதையும் பொதுச் சபையினரே வெளிப்படையாகச் சொல்கிறார்கள், தமிழ்தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகள் அவ்வாறு சின்னத்தை தருவதற்குத் தயாராகக் காணப் பட்டன. சில கட்சிகள் தரத் தயங்கின.

பொதுகட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சியின் சின்னத்தை ஒரு பொதுநிலைப் பாட்டுக்காகப் பயன்படுத்தி அதன் மூலம் திரட்டப்பட்ட வாக்குகளையும் பிரபல்யத்தையும் அடுத்து வரும் தேர்தலில் அக்கட்சி தனது தனிப்பட்ட கட்சி தேவைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக ஓர் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும் என்று அங்கே சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனால் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும்தேர்தல் ஆண்டுகளாகக் காணப்படும் ஓர் அரசியல் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து வரக்கூடிய எந்த ஒருதேர்தலிலும் தமது கட்சி சின்னத்தைப் பயன்படுத்தாமல் விடுவது தொடர்பில் கட்சிகள் அதிகமாக யோசித்தன என.

ஆக பொதுக்கட்டமைப்பின் விசித்திரம் இப்படித்தானிருக்கிறது. அதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்குத் தாம் ஏற்றுக் கொண்ட உடன்படிக்கையின் படி, அதற்காக எந்த விட்டுக் கொடுப்பையும் செய்யத் தயாரில்லை.



அதாவது அவை தாம் இணைந்து மேற்கொள்ளும் தீர்மானத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்வதற்குத் தயாராக இல்லை. காரணம், அடுத்த தேர்தலிலேயே அவற்றின் அக்கறையுள்ளது. அதனால் அவற்றுக்கு இந்தப் பொதுவேட்பாளர் விடயத்தில் முழுமையான ஈடுபாடில்லை என்பதேயாகும். சில உறுப்பினர்களின் நிர்ப்பந்தம், அரசியற் தடுமாற்றம் போன்றவற்றினாலேயே பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை இவை ஆதரிக்கின்றன. குறிப்பாக ரெலோவுக்குள்ளும் புளொட்டுக்குள்ளும் எதிர் நிலைப்பாடுண்டு. இதை அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தனிப்படவும் பொதுவெளியிலும் (வினோநோகராதலிங்கம் ரெலோ) வெளிப்படுத்தி வருகின்றனர். இரண்டாவது காரணம், இந்த விளையாட்டுக்காகத் தம்முடைய நீண்ட கால அரசியல் நலன்களை அவை இழக்கத் தயாரில்லை என்பதேயாகும்.

இந்த லட்சணத்தில் தான் சிதறிக் கிடக்கும் தமிழ்த்தேசியச் சக்திகளை தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற மாயாவி (குறியீடு!) ஒரு புள்ளியில் ஒருங்கிணைத்துத் திரளாகக் கூட்டிக் கட்டுவதைப் பற்றிப் பேசப்படுகிறது. (மேலும் சிரிப்பை அடக்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்).


ஆனாலும் பொதுக்கட்டமைப்பிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் தன்னுடைய சின்னத்தைக் கொடுப்பதற்குப் பெருந்தன்மையுடன் முன் வந்தது என்று சொல்லப் பட்டுள்ளது. அது பொதுச்சபையினரால் ஏற்கப்படவில்லை. (இதற்கான காரணம் இன்னும் பகிரங்கப்படுத்தப் படவில்லை). இவ்வளவுக்கும் பொது வேட்பாளருக்கான தகுதியை வழங்கக் கூடியவாறு பொதுக்கட்டமைப்புக்குள் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் நான்கு உள்ளன.

ஆக இவர்களிடம் எந்தத் திரவியங்களுமே இல்லை. விசுவாசமும் தெளிவும் உண்மையும் இல்லை என்பதே நிரூபணம். என்பதால் தான் ஒரு வேட்பாளருக்காகத் தமிழரசுக் கட்சியிடம் போக வேண்டியிருந்தது. அதற்குள்ளிருந்து ஒரு ஆளை எடுக்க வேண்டியேற்பட்டது.

இதைப் புரிந்து கொண்டோ புரியாமலோ அரியநேந்திரனும் உசாரோடு பொதுவேட்பாளராகத் தன்னுடைய தலையைக் கொடுத்துள்ளார்.

அரியநேத்திரன் தேர்வு செய்யப் பட்டதை ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட், சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி போன்றவை அவ்வளவாக விரும்பவில்லை. காரணம், முன்பு இந்தக் கட்சிகளையெல்லாம் அரியநேந்திரன் ஒட்டுக்குழுக்கள், அரசாங்கத்தின் ஆட்கள், துரோகிகள், காட்டிக் கொடுப்போர், தமிழின விரோதிகள், போராட்டத்தை விலை கூறி விற்பவர்கள் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டியும் விமர்சித்தும் வந்தவர். இறுதி வரையிலும் (ஏன் இப் போதும் கூட) (22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120684** (F)
27yrs, 5'4'' , Single , Rohini , 2 Sevai , Bachelors.. , Director of.., Canada

**ID08120644** (F)
29yrs, 5'7" , Single , Visaakam , 12 Sevai , Bachelors.. , Business Analyst.. , Canada

**ID08120662** (F)
32yrs, 5'2" , Single , Pooraadam , 11 Sevai , Bachelors.. , Product Management, Canada

**ID08120637** (F)
31yrs, 5'6" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Analyst , Canada

**ID08120633** (F)
38yrs, 5'2" , Single , Avittam , 2 Sevai , High School , District manager , Canada

**ID08120640** (F)
29yrs, 5'4" , Single , Kettai , 2 Sevai , Postgraduate.. , Social Media.. , Canada

**ID08120574** (F)
24yrs, 5'3" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Clerk , Canada

**ID08120622** (F)
34yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Masters Degree , development.. , Sri Lanka

**ID08120445** (F)
30yrs, 5' , Single , Mrigasheersham , 5 Sevai , Bachelors.. , Registered.. , Canada

**ID08119978** (F)
28yrs, 5'4" , Single , Pooraadam , 1 Sevai , Bachelors.. , Manager Hospitality.. , Canada

**ID08119833** (F)
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08118630** (F)
30yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08120537** (F)
33yrs, 5' , Divorced , Visaakam , N/A Sevai , Bachelors.. , Optometrist , Australia

**ID08120557** (F)
29yrs, 5'4" , Single , Uthiraadam , N/A Sevai , Diploma , Cosmetics.., Canada

**ID08120696** (F)
30yrs, 5'1" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degre , Clinical Research.. , Canada

**ID08120686** (F)
32yrs, 5'3" , Single , Swaathi , 2 Sevai , Postgraduate.. , Montessori.. , United States

**ID08120681** (F)
28yrs, 5'3" , Single , Mrigasheersham , 2 Sevai , Bachelors.. , Nurse , Canada

**ID08120676** (F)
26yrs, 5'3" , Single , Chithirai , 4 Sevai , Bachelors.. , Program Coordinator , Canada

**ID08120533** (F)
51yrs, 5'1" , Single , Makam , N/A Sevai , High School , Professional.. , Sri Lanka

**ID08120620** (F)
28yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Mortgage Funder.. , Canada

**ID08120610** (F)
21yrs, 5'2" , Single , Revathi , N/A Sevai , Diploma , Hairstylist , Sri Lanka

**ID08119986** (F)
37yrs, 5'3" , Single , Poorattathi , 12 Sevai , Bachelors.. , Doctor , Canada

**ID08115173** (F)
37yrs, 5'3" , Single , Bharani , 2 Sevai , Masters Degree , Electronic.. , Sri Lanka

**ID08120390** (F)
28yrs, 5'2" , Single , Poorattathi , N/A Sevai , Bachelors.. , Accountant , Canada

**ID08120572** (F)
38yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Director Banking , Canada

**ID08120566** (F)
40yrs, 5'3" , Divorced , Karthigai , N/A Sevai , Bachelors.. , Payroll Specialist , Canada

**ID08120567** (F)
25yrs, 5'2" , Single , Aswini , 2 Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120558** (F)
28yrs, 5'4" , Single , Pooram , 6 Sevai , Bachelors.. , Stundent , Sri Lanka

**ID08120565** (F)
27yrs, 5'5" , Single , Thiruvaathirai , 8 Sevai , Postgraduate.. , Studies , Sri Lanka

**ID08120543** (F)
42yrs, 4'8" , Seperated , Not Specified , N/A Sevai , Diploma , Houspital.. , United Kingdom

## மணமகன்



**ID08120673** (M)
35yrs, 5'2'' , Single , Pooraadam, 11 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642** (M)
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616** (M)
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613** (M)
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada

**ID08120559** (M)
31yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 11 Sevai , Diploma , BUSINESS OF.. , Canada

**ID08120469** (M)
35yrs, 6'1" , Single , Uthirattathi , 8 Sevai , Bachelors.. , Own business.. , Canada

**ID08113686** (M)
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120335** (M)
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08120598** (M)
30yrs, 5'10" , Single , Moolam , 7 Sevai , Bachelors.. , Electrical. , Canada

**ID08117127** (M)
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08120594** (M)
30yrs, 5'11" , Single , Rohini , 9 Sevai , High School , Manager , Canada

**ID08120589** (M)
36yrs, 5'5" , Single , Bharani , 9 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120690** (M)
39yrs, 5'6" , Single , Swaathi , N/A Sevai , High School , Building Construction , Sri Lanka

**ID08120281** (M)
28yrs, 5'11" , Single , Uthirattathi , 10 Sevai , Bachelors. , Customer Quality.. , United States

**ID08120694** (M)
39yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Canada

**ID08120670** (M)
30yrs, 5'11" , Single , Poosam , 12 Sevai , Diploma , Team leader , Canada

**ID08120660** (M)
32yrs, 5'10" , Single , Anusham , 1 Sevai , Bachelors.. , Mortgage Specialist , Canada

**ID08120550** (M)
47yrs, 5'6" , Divorced , Bharani , N/A Sevai , Bachelors.. , Own Business , Canada

**ID08120617** (M)
31yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , High School , Restaurant.. , Canada

**ID08120601** (M)
58yrs, 5'3" , Divorced , Poorattathi , N/A Sevai , Bachelors.. , RMT Therapist , Canada

**ID08120600** (M)
31yrs, 5'8" , Single , Thiruvonam , N/A Sevai , High School , Mechanical.. , Qatar

**ID08120580** (M)
36yrs, 5'8" , Single , Pooram , 12 Sevai , Diploma , Finance , Canada

**ID08120579** (M)
30yrs, 5'11" , Single , Aswini , 6 Sevai , Masters Degree , Engineer , Canada

**ID08120402** (M)
35yrs, 5'5" , Single , Uthiraadam , 2 Sevai , Diploma , A Z Truck.. , Canada

**ID08120570** (M)
31yrs, 5'10" , Single , Bharani , 7 Sevai , High School , Property Supervisor , Canada

**ID08120549** (M)
32yrs, 5'7" , Single , Anusham , 7 Sevai , Bachelors.. , Pharmacy Dr , Canada

**ID08120564** (M)
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator , Canada

**ID08120661** (M)
32yrs, 5'11" , Single , Rohini , 4 Sevai , Bachelors.. , IT Technician , Canada

**ID08120635** (M)
41yrs, 5'8" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Admin IT , United States

**ID08120521** (M)
31yrs, 5'11" , Single , Uthirattathi , 1 Sevai , Postgraduate.. , Grandmaall.. , Canada

# தமிழ் மக்கள் பொதுக் கட்டமைப்பும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
– K.T.கணேசலிங்கம் –



தமிழ் பொதுவேட்பாளர் இலங்கைத் தீவின் அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளார். கொள்கை அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளர் ஒரு குறியீடாக அடையாளப்படுத்தப்பட்ட போதும் அத்தகைய அடையாளப்படுத்தல் இலங்கைத்தீவின் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களையும் அவர்களுடைய நிகழ்ச்சி நிரல்களையும் அதனை அடிப்படையாகக் கொண்ட தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் ஒழுங்கு முறைகளையும் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் கட்சிகளின் எண்ணங்களையும் புதிய திசைக்கும் நகர்த்தியுள்ளது. பொது வேட்பாளர் என்பது தமிழ் மக்களின் அரசியல் நடைமுறை தமிழ் மக்களது ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் தேசியத்தையும் கட்டமைப்பதாக கருதப்படுகிறது.

ஆனால் அதனுடைய முயற்சிக்கு நெருக்கடி உள்ளாக்கும் விதத்தில் பொதுக் கட்டமைப்பில் உள்ள அங்கம் வகிக்கும் கட்சிகள் தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் அழைப்பை ஏற்றமை அதிக அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது இக்கட்டுரையும் அத்தகைய குழப்பத்தின் அடிப்படை எண்ணங்களை தேடுவதாக உள்ளது

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்ட பின்னர் சில அரசியல் கட்சிகள் (மூன்று) தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் அழைப்பை ஏற்று உரையாடச் சென்றமை தமிழ் மக்கள் மத்தியில் அதிகமான அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அதே நேரம் அத்தகைய கட்டமைப்பில் ஒருங்கிணைந்த ஐக்கிய மன்றம் முன்வைத்த வாதங்கள் எல்லாவற்றையும் அக்கட்சிகள் உடைத்து விட்டதாக விவாதங்கள் எழுந்திருக்கின்றன. இத்தகைய விவாதங்கள் மத்தியில் இரண்டு மிகப் பிரதானமான நியாயப்பாடுகள் இருக்க முடியும் என்று கருத்து முதன்மைப்படுத்தப்படுகிறது. அதனை சற்று விரிவாக அவதானித்தல் அவசியமாகும்.

முதலாவது அரசியல் கட்சிகளின் அடிப்படையில் கட்சிகளுடைய நலன்களை கருத்தில் கொண்டு கட்சியின் உறுப்பினர்களின் நலன்களை கருத்தில் கொண்டு அரசியல் கட்சியாக பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த நிலையிலும் தென்னிலங்கை வேட்பாளர்களை அழைக்கப்பட்ட போது கலந்து கொண்டு உரையாடுவது தவறான புரிதலாக கொள்ள முடியாது என்று விவாதிக்கப்படுகிறது.

காரணம் அரசியல் கட்சிகள் தமது எல்லைக்குட்பட்ட விதத்திலும் இலங்கை அரசியலுக்குள் தேர்தல் அரசியலோடும் அதன் நியதிகளோடும் பயணிப்பவர்கள். தென் இலங்கை அரசியலில் அதிகம் தங்கியிருப்பவர்கள். அதனால் அதிக முடிவுகளை நோக்கி அவர்கள் பயணிப்பது அதற்கான ஒரு உரையாடலை உருவாக்குவதும் தவறான அணுகுமுறையாக கொள்ள முடியுமா என்பது பிரதான கேள்வியாகும். அது ஒரு ஜனநாயக உரிமையாகக் கூட விவாதிப்பவர்கள் உண்டு. தமிழ் மக்கள் பொதுக் கட்டமைப்பும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் விதத்தில் தனது வரைபுகளையும் உரையாடல்களையும் கொண்டுள்ளது.

அதை கடந்து அவர்கள் பொது வேட்பாளர் என்ற தளத்தில் வடக்கு கிழக்கில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகின்றன எண்ணத்தோடு அத்தகைய உடன்பாட்டுக்கு வருகை தந்தவர்கள் என்பதும் கவனத்திற்குரியது இரண்டு தமிழ் பொது வேட்பாளர் என்பது குறியீட்டுக்காகவே அக்கட்சிகள் ஒன்றிணைந்து கையொப்பமிட்டவர்கள். அத்தகைய நிலையில் இருந்து அவர்கள் இன்னுமே விலக்காத நிலை காணப்படுகின்றது.

தென் இலங்கையில் வெற்றி கூட்டணி எதிலும் அக்கட்சிகள் ஒப்பமிடாத வரையும் அக்கட்சிகள் பொதுக்கட்டமைப்பின் அங்கமாகவே காணப்படுகின்றனர். தமிழ் பொது வேட்பாளர் சார்ந்த எண்ணம் சரியானதாகவே அக்கட்சிகள் கருதுவதாக கொள்ள முடியும். ஆனால் தென் இலங்கை வேட்பாளர் ஒருவரது வெற்றிக்கு ஒப்பம் இடுவார்களாயின் அதற்கான விளைவுகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகும். அதே நேரம் இத்தகைய சந்திப்புக்களை தமிழ் பொது வேட்டபாளருக்கு எதிராக பிரச்சாரம் செய்யவதற்கு வாய்ப்பினைக் கொடுப்பார்களானால் பொது கட்டமைப்பிலும் தமிழ் மக்களின் பொதுச் சபையோடும் சேர்ந்து பயணிப்பது என்பது நெருக்கடிக்குரிய விடயமாக அமையும்.

மூன்றாவது தென் இலங்கை வேட்பாளர்களால் அழைக்கப்பட்ட போது ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் பொதுக் கட்டமைப்பின் சிவில் தரப்பினருக்கும் தனிப்பட்ட அழைப்புகளே முன்வைக்கப்பட்டது. அதனால் தனிப்பட்ட அழைப்புகள் என்ற அடிப்படையில் பொதுக் கட்டமைப்பு சாராத விதத்தில் அவர்கள் கலந்து கொள்வது நியாயமானதாகவே தெரி




கின்றது. அவர்களுடைய நலன்களை பாதிக்கின்ற விதத்தில் அமைகின்ற இத்தகைய அழைப்பு தவிர்க்க முடியாமல் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்துக்குள் தமிழ் கட்சிகளின் அரசியல் காணப்படுகின்றது என்பது துயரமானதே. அதனால் தனிப்பட்ட அழைப்புக்கு மதிப்பளித்து கலந்து கொள்வது என்பது உத்தியாக கூட அக்கட்சிகள் கட்டமைத்திருக்க முடியும். கட்சிகள் என்ற அடிப்படையில் அத்தகைய 'உத்திகளை பயன்படுத்துவது நியாயமற்ற செய்முறை என்று விவாதித்துக் கொள்ள முடியாது.

மறுபக்கத்தில் தென் இலங்கை வேட்பாளர்களால் அழைக்கப்பட்ட போது அத்தகைய அழைப்பினை எவ்வாறு எதிர் கொண்டிருக்க வேண்டும் என்று விவாதங்கள் முன்வைக்கப் படுகின்றன. அதன் அடிப்படையில், ஒன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஐக்கி யமாகவும் ஒருமைப்பாட்டுடனும் செயற்பட வேண்டும் என்ற நோக்கோடு அத்தகைய அழைப்பினை பொதுக் கட்டமைப்பாக தவிர்க்க முயன்ற போது அதனை அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொண்டு செயல்பட்டிருக்க முடியும். அதற்கான அடிப்படைகளை பொதுக் கட்டமைப்பின் ஒப்பமிடுகிற போது எடுக்கப்பட்ட முடிவாகவும் அமைந்திருந்தது. அத்தகைய முடிவுக்கு பங்கம் விளைவிக்காத விதத்தில் பொதுக் கட்டமைப்பும் சிவில் தரப்புகள் எவ்வாறு அதனை எதிர்கொண்டது என்பதும் அதே போன்று ஓர் அணுகுமுறையை குறித்த அரசியல் கட்சிகள் மேற்கொண்டு இருக்க வாய்ப்பு இருந்தது. அத்தகைய வாய்ப்பினை அக்கட்சிகள் பயன்படுத்தி இருக்கக்கூடிய கால அவகாசமும் அதற்கான உரையாடலும் அதற்கான புரிதலும் பொதுக் கட்டமைப்பில் முன்வைக்கப்பட்டிருந்தது. தார்மீக அடிப்படையில் இத்தகைய உடன்பாட்டின் பின்னர் பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திடப்பட்ட பின்னர் அதனை மீறியிருக்கக் கூடாது. இந்த அடிப்படையிலும் எந்த நோக்கத்துக்காக உடன்பாடு எட்டப்பட்டதோ அத்தகைய நோக்கத்தை நிறைவு செய்யும் விதத்தில் செயல்பட்டிருக்க வேண்டிய பொறுப்பாண்மை குறித்த அரசியல் கட்சிகளுக்கு உண்டு. ஆனால் அத்தகைய நிலையில் இருந்து அவர்கள் தவறு செய்திருப்பது எதிர் காலத்தில் அக்கட்சிகள் மீது மக்கள் கொள்ளுகின்ற அதிருத்தி தவிர்க்க முடியாத ஒன்றாக ஏற்படக் கூடியதாக அமையும். இரண்டு தென்னிலங்கை வேட்பாளர்கள் எத்தகைய தீர்வையும் தமிழ் மக்களுக்கு வழங்கப் போவதில்லை என்பது கடந்த வருடங்களில் கண்டு கொள்ளப்பட்ட அனுபவிக்கப்பட்ட அரசியல். அத்தகைய கோட்பாட்டு புரிதல் தவிர்க்க முடியாது எழுந்ததன் விளைவே தமிழ்பொது வேட்பாளர் என்ற குறியீடாகும். இதே குறியீட்டுக்கு கட்டுப்பட்ட பின்னர் மீண்டும் தென்னிலங்கையில் உள்ள வேட்பாளர்கள் மீது நம்பிக்கை கொள்வதும் அவருடைய அழைப்பு ஏற்று உரையாடுவதும் நியாயத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ள முடியாத அம்சமாகவே காணப்படுகிறது. ஒரு நீண்ட நெருக்கடிக்கு உட்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனை கருத்தில் கொள்ளாது வெறும் பொருளாதாரப் பிரச்சனையாகவும் கட்சிகளையும் தனி நபர்களையும் கையாளுகின்ற அரசியலாகவும் கருதுகின்ற தென்னிலங்கைச் சூழலானது தற்போதைய ஜனாதிபதி தேர்தலில் மட்டும் தீர்வினை வழங்கிவிடும் என்று கருதுவது எந்த வகையில் நியாயத்தன்மை பொருந்தியது. இதனை ஏதாவது ஒரு தர்க்கத்தினால் நியாயப்படுத்த முடியுமா?


மூன்று இவ்வாறு கடந்த கால அனுபவங்களையும் வரலாற்றையும் கற்றுக் கொண்ட அல்லது கற்றுக் கொள்ள வேண்டிய தரப்புகளான தமிழ் அரசியல் கட்சிகள் அவ்வாறு தமிழ் பொதுக் கட்டமைப்பிலும் அதே சமதூரத்தில் தென்னிலங்கை வேட்பாளருடனும் ஒத்துழைப்போடு பயணிப்பது என்பது அடிப்படையில் அரசியல் தருமத்துக்கும் நியாயத்துக்கும் விரோதமானது. அதிக விரோதமான செயலை நியாயத் தன்மை கொண்டதாக முதன்மைப்படுத்த முடியாது. இதனால் இத்தகைய செய்முறை சார்ந்த விவாதங்களில் பொதுமக்கள் அதிகமான அதிர்ச்சியோடு காணப்படுகின்றனர். அத்தகைய அதிருப்தி கட்சிகளை நோக்கியும் அதன் தலைவர்களை நோக்கியும் முதன்மைப் படுத்தப்பட்டிருக்கிறது. தென்னிலங்கை வேட்பாளர் மீதான எந்தளவுக்கு நம்பிக்கை இழக்கப்படுகிறதோ அதேயளவுக்கு அத்தகைய அதிர்ச்சி பங்கெடுத்த அரசியல் கட்சிகளின் தரப்பில் முன் வைக்கப்படுகிறது. இதே நேரம் இத்தகைய பொதுக்கட்டமைப்பு முறையில் ஒப்பமிட்டு கொண்ட ஏனைய நான்கு கட்சிகளும் சிவில் தரப்புக்களும் தென் இலங்கையின் அழைப்பை சரியான முறையில் எதிர் கொள்ள வேண்டிய விதத்தில் செயல்படுகின்ற போக்கினை வெளிப்படுத்தி இருக்கின்றன. தென் இலங்கையின் அழைப்பை மீறாத விதத்தில் பொது கட்டமைப்பானது தெளிவான பதிலை வழங்கியிருந்தது. சிவில் அமைப்புகள் தென் இலங்கை அழைப்பை எதிர் கொள்ளும் உத்தியோடும் திராணியோடும் காணப்படுகின்றன. அது மட்டுமின்றி தமிழருடைய நலன்களை முன்னிறுத்திக் கொண்டு அத்தகைய தரப்புகள் செயல்படுகிறன. சிவில் தரப்புக்களோடு உடன்பட்டு கொண்ட கட்சிகள் அதனை மீறுவது என்பது நியாயமற்ற செய்முறையாகவே தெரிகிறது. பொது மக்களாலும் ஊடகப் பரப்பாலும் பார்க்கப்படும் தமிழ் சிவில் அமைப்புகளை பொறுத்த வரையில் அவை தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகவும் அதே நேரம் பொது கட்ட மைப்பாகவும் தொழிப்படுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் இக்கட்டமைப்புக்குள் புதிய உறுப்பினர்களை உள் வாங்கவும் புதிய கட்சிகளை இணைக்கவும் ஜனநாயக பூர்வமாக அவற்றை கையாளவும் முயலுகின்றன அவ்வாறு அத்தகைய அழைப்புகளை முன் வைப்பது போன்று பொது கட்டமைப்பிலிருந்து அதில் ஒப்பமிட்ட தரப்புகள் இருந்தும் அத்தகைய செய்முறையில் சேர்ந்து பயணிக்க முடியாத நிலை ஏற்படுகிற போது அத்தரப்புகள் தங்களுடைய விருப்பத்துக்கு ஏற்ற வகையில் வெளியேறுவதற்கான ஜனநாயக உரிமை அத்தரப்புகளிடம் ஒப்படைத்திருக்கின்றன. எவ்வாறு பிற கட்சிகளையும் அமைப்புகளையும் உள்வாங்குவதற்கு பொதுக் கட்டமைப்பும் தமிழ்மக்கள் பொதுச் சபையும் திறந்து இருக்கின்றதோ அதே போன்று இத்தகைய உடன்பாடுகளில் சேர்ந்து பயணிக்க முடியாத தரப்புகள் வெளியேறுவதற்கான அனுமதியும் இந்த பொதுக் கட்டமைப்பிடம் உண்டு. இது ஜனநாயக பூர்வமான உரிமைகளை ஏற்றுக் கொள்கின்ற கட்டமைப்பு என்ற அடிப்படையில் செயல்பட விரும்புகிறது. அதனை நோக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபை பொதுக் கட்டமைப்பும் செயல்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

எனவே தமிழ் மக்கள் பொதுச்சபையும் தமிழ் மக்கள் பொதுக் கட்டமைப்பு தனது இருப்பை பாதுகாத்துக் கொண்டு அதனுடைய அங்கத்துவத்தை சரி செய்வதும் மீளமைப்பதும் புதியவற்றை உள் வாங்குவதும் பொருத்தம் அற்றவற்றை வெளியேற்றுவதும் தவிர்க்க முடியாத செய்முறையாக மாறி உள்ளது. இதற்காக பொது கட்டமைப்பு காணாமல் போய் விட்டது என்றோ பொதுமக்கள் சபை முடிவுக்கு வந்து விட்டது என்றோ விவாதிக்க முடியாது. அத்தகைய விவாதத்துக்கான எத்தகைய வாய்ப்புகளும் ஒப்படைக்கப்பட மாட்டாது.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! அனுகூலமாக அனைத்து காரியங்களும் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் சீராக நடக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரசசனைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். வழக்குகளில் மெத்தனம் காணப்படும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மனக்கவலை அகலும். வழக்கு விவகாரங்களில் இருந்த தாமதமான போக்கு நீங்கும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை.





கடகராசி அன்பர்களே! வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு வரலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர்.





சிம்மராசி அன்பர்களே! சிக்கல்கள் தீரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவர். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும். வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும்.




கன்னிராசி அன்பர்களே! மன சஞ்சலம் நீங்கும். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். குடும்பத்தினரின் செயல்பாடுகள் மகிழ்ச்சியை கொடுக்கும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளை அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மன வருத்தம். நீங்கும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். குடும்பத்தினரின் பேச்சுக்கு எதிர்த்து பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாக பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும்





விருச்சிகராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி பணிகளை கவனிப்பர்.







தனுசுராசி அன்பர்களே! திட்டமிட்டு எதையும் செய்ய வேண்டியது அவசியம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தம் போன்றவை ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல்கள் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே1 சாமர்த்தியம் அதிகரிக்கும். மனவருத்தம்நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தனாதிபதி சூரியன் சஞ்சாரத்தால் பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.




கும்பராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்னைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.




மீனராசி அன்பர்களே! சாதகமான பலன்கள் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பணவரவில் திருப்தி இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சு நடக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பொதுவேட்பாளர் கண்டு பிடிப்பு:-

(19ம் பக்கத் தொடர்ச்சி) அப்படியான ஒரு உளநிலையிலேயே இருக்கிறார் அரியநேந்திரன். எனினும் ஒரு வேட்பாளரை நிறுத்தியே ஆக வேண்டும். இதற்கு மேலும் ஆட் தேடிக் காலத்தை நீடிக்க முடியாது என்ற நிலையில் தான் அவை இதை யெல்லாம் பொறுத்துக் கொண்டு அவரை ஆதரிக்கின்றன. இதையெல்லாம் ஏற்று அனுசரித்துப் போக வேண்டிய இக்கட்டான நிலை பொதுச்சபைக்கும் பொதுக் கட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கும் வந்து விட்டது.

இப்படிப் பல இடியப்பச் சிக்கல்களுக்கு மத்தியில் பொதுவேட்பாளரைக் கண்டு பிடித்து, வேட்பு மனுத்தாக்கல் செய்தாலும் பிணக்கும் பிரச்சினைகளும் முடியவில்லை. அவை உட் கசப்பையே தந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் வெளிப்பாட்டுக்கு ஒரு சாட்சியமாக ஒரு பொதுக் குறியீட்டை ஏன் தேட வேண்டி வந்தது? ஏனென்றால் தமிழ் மக்கள் மத்தியில் கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. ஆனால் தமிழ் அரசியல் சக்தியை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியமிக்க தலைவர்கள் அநேகமாக இல்லை.

தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு பொதுநிலைப்பாட்டின் கீழ் ஒரு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றிணைக்க வல்ல ஜனவசியமிக்க தலைமைகள் இருந்திருந்தால் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளருக்கு தேவையே இருந்திருக்காது. எனவே ஒரு பொதுத்தமிழ் வேட்பாளரை தேடுவதில் உள்ள சவால் என்னவென்றால், தமிழ் மக்களை ஒரு பொதுக் குடையின் கீழ் ஒன்றிணைக்க வல்ல தலைமைகளுக்கு தட்டுப்பாடு உள்ளது என்பது தான் எனப் பொதுச்சபையைச் சேர்ந்த நிலாந்தன் பகிரங்கமாகவே குறிப்பிட்டுள்ளார்.

பொதுக் கட்டமைப்பில் இணைந்து ள்ள கட்சிகளுக்கும் அதற்கு வெளியே உள்ள கட்சிகளுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் இதை விட வேறு கௌரவம் வேண்டுமா? நமக்கும் தெரியும் இதுதான் உண்மை நிலவரம் என்று. இதை நாம் ஏற்கனவே பல தடவை சொல்லி விட்டோம். ஆனால், இவர்களையெல்லாம் தலைவர்கள் என்று ஏற்றுக் கொண்ட பொதுச் சபையினர், ஒன்றாகக் கூடிப் பேசி, தேநீர் குடித்து விருந்துண்டு கொண்டே இப்படியொரு விமர்சனத்தை குற்றச்சாட்டை பொதுவெளியில் சொல்லியிருப்பது தான் கேள்வியை எழுப்புகிறது.

ஆக மொத்தத்தில் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தொடக்கத்திலிருந்து தலையில் தூக்கிச் சுமந்து கொண்டிருப்பது பொதுச் சபையினர் என்றே நிரூபிக்கப்படுகிறது. 15 ஆண்டுகளாக இந்தச் சிந்தனையைப் பொதுச் சபைக்குள்ளிருக்கும் சில கருத்துருவாக்கிகள் தான் (மேதாவிகள்) சுமந்து கொண்டிருக்கின்றனர். இப்போது அதை நடைமுறையாக்க முற்படுவதாகச் சொல்கிறார்கள். அதற்காகத் தாம் பட்ட படுகின்ற சிரமங்களையும் செலுத்துகின்ற உழைப்பையும் பற்றி விளக்குகிறார்கள்.

பொதுவேட்பாளரை ஏற்றிருக்கும் கட்சிகள், வெளியே சொல்கின்ற அளவுக்கு இதில் சீரியஸாகவும் இல்லை. நேர்மையாகவும் இல்லை. இதற்காக உழைப்பதாகவும் இல்லை. இதனால் தான் பொது வேட்பாளர் வேட்புமனுத் தாக்கல் செய்யுமிடத்திற் கூட இவர்களில் பலரும் நிற்கவில்லை. அதற்குள் சிங்களத் தரப்பின் (எதிர்த்தரப்பின்) வேட்பாளரைச் சந்திப்பதற்காகக் கொழும்புக்கு ஓடிவிட்டனர் என்று கவலைப்படுகின்றனர் பொதுக்கட்ட மைப்பினர்.

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தி யதே எதிர்த்தரப்பினர் மீது நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் தான். அப்படியிருக்கும் போது வேட்பு மனுத் தாக்கல் செய்து விட்டு, ரணில், சஜித், அனுர, நாமல் என்று ஓடித் திரிந்தால் மக்கள் எப்படிப் பொது வேட்பாளரை ஏற்றுக் கொள்வார்கள்? என்ற கேள்வி யையும் எழுப்புகின்றனர். இதனால் தான் தாம் இந்தச் சந்திப்புகளை நிராகரித்தோம் என்றும் விளக்குகின்றனர். இந்த நியாயம் மதிக்கப்படக் கூடியதே!

இதேவேளை தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற விடயத்தை ஆரம்பித்து வைத்தது தாமே என்று ஈ.பி.ஆர்.எல். எவ் கூறுகிறது. திரு. சுரேஸ் பிரேமச் சந்திரனே இதனை முன்னெடுத்தார் என்கின்றனர் ஈ.பி.ஆர்.எல். எவ்வின் முக்கியஸ்தர்கள்.

தமிழ்ப்பொது வேட்பாளரைப் பற்றிப் பிள்ளையார் சுழி போட்டதே தமது தரப்பு என்கிறது யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கி வரும் தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைக் குழுமம் ஒன்று. வேண்டுமென்றால், எங்களுடைய பத்திரிகையைப் புரட்ப் பாருங்கள். அதற்கான ஆதாரமிருக்கும் என்று அந்தத் தரப்பிலிருந்து கூறப்படுகிறது.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, வேட்பாளரான அரியநேத்திரன் மீது அவருடைய தமிழரசுக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்கத் தீர்மானித்துள்ளது. கட்சியின் நிலைப்பாட்டுக்கு மாறாக, கட்சிக்குத் தெரிவிக்காமலே அதனுடைய மத்தியகுழு உறுப்பினர் ஒருவர் இப்படிச் செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்குரிய விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று ஒரு காலக்கெடுவை விதித்திருக்கிறது தமிழரசுக் கட்சி. அதுவரையிலும் கட்சிச் செயற்பாடுகளில் அரியநேத்திரனுக்கு இடமில்லை. ஆக, இப்படி ஏகப்பட்ட சிக்கல்கள், முரண்பாடுகள், நம்பிக்கையீனங்களின் மத்தியில் தான் தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார். என்னவோ இதையெல்லாம் பார்க்கும் போது முன்னர் கிராமங்களில் ஆடப்படும் கூத்தில் வருகின்ற பபூன்கள் தான் கண்ணுக்குள் நிற்கின்றனர்.

# இஸ்ரேல் - ஈரான் நாடுகளின் இராணுவ பலம்

(18ம் பக்கத் தொடர்ச்சி) இருந்தாலும், அது அணு ஆயுதங்கள் உருவாக்குவதற்குத் தனது அணுசக்தித் திட்டத்தைப் பயன்படுத்த முயல்வதாக வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மறுக்கிறது. இரான் இஸ்ரேலை விடப் பல மடங்கு பெரிய நாடு. அதன் மக்கள் தொகை கிட்டத்தட்ட 8.9 கோடி. இது இஸ்ரேலின் மக்கள்தொகையான 1 கோடியை விட கிட்டத்தட்ட பத்து மடங்கு. இரான், இஸ்ரேலை விட ஆறு மடங்கு அதிக மான இராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது. இரானிடம் 6 லட்சம் இராணுவ வீரர்கள் உள்ளனர். இஸ்ரேலிடம் 1.7 லட்சம் வீரர்கள் உள்ளனர் என்று ஐ.ஐ.எஸ். எஸ். கூறுகிறது. நன்றி:- பிபிசி

# ஆட்சிக் கவிழ்ப்புகளின் பின்னணி

(16ம் பக்கத் தொடர்ச்சி) கொண்டு வருவதற்கு அமெரிக்கா முயற்சிக்கிறது, என்ற கேள்வி எழுகிறது. அமெரிக்கா வெளிப்படையாக யாரையும் முன்னிலைப்படுத்தவில்லை. ஆனால் இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற பல்வேறு தரப்புகளுடன் தொடர்புகளை பேணுகிறது. வியூகங்களை வகுத்துக் கொடுக்கிறது. அவையெல்லாம் யாரோ ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவதை நோக்காகக் கொண்டவை தான். குறித்த நபரை வெற்றி பெறச் செய்வதற்கு நேரடியாக அதனால் தலையிட முடியும். தான் விரும்பும் வேட்பாளருக்கு சவாலாக இருக்கின்ற போட்டியாளர் அல்லது போட்டியாளர்களை தோற்கடிப்பதற்காகவும் அதனால் செயற்பட முடியும். இதை இரண்டையும் ஒரே நேரத்தில் கையாளக் கூடிய வசதிகளையும் வாய்ப்புகளையும் கொண்ட நாடு அமெரிக்கா.

இன்னும் சில வாரங்களில் அமெரிக்கா யாரை ஆதரிக்கிறது, யாரை அரியாசனத்தில் அமர்த்த விரும்புகிறது என்பதை ஓரளவுக்கு புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த தேர்தலில் வெற்றி பெறுபவர் யாராக இருந்தாலும், அவர் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை கொண்டவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவின் அரசுக்கு ஏற்பட்ட நிலை கோட்டாவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதி மீண்டும் ஏற்படாது என்று உறுதியாக கூறமுடியாது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# உக்ரேனுக்கு 51 டொலர் நன்கொடை வழங்கியமைக்காக அமெச்சூர் நடனக் கலைஞருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கிய ரஷ்யா



உக்ரைனை ஆதரிக்கும் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு $51 (£39) நன்கொடையாக வழங்கியதற்காக தேசத்துரோகத்திற்காக அமெச்சூர் நடன கலைஞர் க்சேனியா கரேலினாவுக்கு ரஷ்ய நீதிமன்றம் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அமெரிக்க மற்றும் ரஷ்ய குடியுரிமை பெற்ற கரேலினா, மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடைபெற்ற விசாரணைக்குப் பிறகு கடந்த வாரம் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அவர் லாஸ் ஏஞ்சல்ஸில் வசித்து வந்தார் மற்றும் 2021 இல் அமெரிக்க குடியுரிமை பெற்றார். கடந்த ஜனவரி மாதம் மாஸ்கோவிற்கு கிழக்கே 1,600 கிமீ (1,000 மைல்) தொலைவில் உள்ள யெகாடெரின்பர்க்கில் குடும்ப வருகையின் போது அவர் கைது செய்யப்பட்டார்.

வழக்கறிஞர்கள் 15 ஆண்டுகள் சிறை தண்டனை கேட்டனர். யெகாடெரின்பர்க்கில் உள்ள நீதிமன்றம், தேசத்துரோகக் குற்றத்திற்காக அவளைக் குற்றவாளியாகக் கண்டறிந்து, பொது ஆட்சிக் காலனியில் சிறைத் தண்டனை விதித்தது.

உக்ரேனிய இராணுவத்திற்கு ஆயுதங்களை வழங்கும் உக்ரேனிய அமைப்புக்கு பணம் திரட்டியதாக கரேலினா ரஷ்யாவின் குளுடீ பாதுகாப்பு சேவையால் குற்றம் சாட்டப்பட்டார். 22 பிப்ரவரி 2022 அன்று உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பின் முதல் நாளில் $51.80 ஒரே ஒரு பரிமாற்றம் செய்யப்பட்டதாக ரஷ்ய மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்தனர். அவரது வழக்கறிஞர் மிகைல் முஷைலோவ், கரேலினா பணத்தை மாற்றியதை மட்டுமே ஒப்புக் கொண்டதாகவும், இந்த நிதி இரு தரப்பிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் என்று நம்புவதாகவும் கூறினார். தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக அவர் ரஷ்ய ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இவரது காதலன், குத்துச் சண்டை வீரர் கிறிஸ் வான் ஹெர்டன், கடந்த வாரம் விசாரணை வருத்தமளிப்பதாகவும், நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் கூறினார். என்னால் அவளது காலணிகளில் என்னை வைத்துக் கொள்ள முடியவில்லை, அவள் என்ன செய்கிறாள் என்று கற்பனை கூட செய்ய முடியவில்லை,' என்று அவர் கூறினார்.

ரஸோம் ஃபார் உக்ரைன் என்ற தொண்டு நிறுவனம், இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெச்சூர் நடன கலைஞர் கைது செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்ததாக' கூறியது மற்றும் ஆயுதங்கள் அல்லது வெடி மருந்துகளுக்காக பணம் திரட்ட மறுத்தது. இது மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்தில் கவனம் செலுத்தும் அமெரிக்காவால் நிறுவப்பட்ட தொண்டு நிறுவனம் என்று அது கூறியது.

கடந்த ஆண்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின், தேசத் துரோகத்திற்கான அதிகபட்ச சிறைத்தண்டனையை 20 ஆண்டுகளில் இருந்து ஆயுள் வரை உயர்த்தும் ஆணையில் கையெழுத்திட்டார். மனித உரிமை ஆர்வலர்களின் கூற்றுப்படி, கடந்த ஆண்டு அதிக எண்ணிக்கையிலான தேசத் துரோக வழக்குகள் திறக்கப்பட்டன.

